645

செல்வன்
செந்தமிழ் வாசகம்

TB
031(5)
N52
86556.

ஜெம் செல்வன் கம்பெனி.
நாகர்கோவில்

செல்வன்
செந்தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

ஆசிரியர் :
G. மைக்கேல் பிள்ளை, M.A.

பதிப்பாசிரியர் :
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

ஜெகசெல்வன் கம்பெனி
நாகர்கோவில்

பதிப்புரிமை]

[விலை 0-10-0

முதற்பதிப்பு—நவம்பர், 1952
இரண்டாம் பதிப்பு—1953

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
Fort St. George Gazette of 13—5—53,
[*Supplement to Part I-B*, *Page* 28 & *Page* 88]

Kabeer Printing Works, Madras (2229)

முன்னுரை

'செல்வன் செந்தமிழ் வாசகம்' என்னும் மகுடம் புனைந்த இவ்வாசக வரிசை, சென்னைக் கல்வியிலாக்கா அதிகாரிகள் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தை முற்றுந் தழுவி இயற்றப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலையிற் பயிலும் மாணவ மாணவிகள், ஐந்தாம் வகுப்பை முடிப்பதற்குள், தங்கள் தாய் மொழியிற் பிழையறப் பேசவும் எழுதவும், எடுத்த நூலைப் படித்துப் பொருள் உணரவும் வல்ல மொழிப் பயிற்சியைப் பெறுவதுடன், கல்வி கற்பதில் ஆர்வம் கொண்டு மேன்மேலும் கற்கவும் வழி வகுப்பது இப்பாடத் திட்டத்தின் நோக்கமாகும்.

இக்கருத்தை உட்கொண்டே இவ்வாசக வரிசை இயற்றப்பட்டுள்ளது என்பது, ஆரம்பப் பாடசாலையிற் கல்வி கற்பிக்கும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் இவ் வரிசையைக் கவனிப்பின் எளிதிற் புலனாகும். சிறுவர் சிறுமியர்க்கு மொழிப் பயிற்சியில் மகிழ்ச்சியுடன் ஈடுபடுதற்கான வகையில் இனியதும் எளியதும் விரும்பிக் கற்கத் தக்கதுமான முறையில் மொழியமைப்பும் பொருளமைப்பும் அமைந்துள்ளன.

தமிழ் மொழி பயில்வார் அம்மொழித் திறம் அறிந்து பயில்வதற்கு ஓரளவு இலக்கணப் பயிற்சி இன்றியமையாதது. ஆதலின், இவ்வாசக வரிசையில் வகுப்புக்கேற்ற வகையில் எளிய முறையில் இலக்கணப் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் அப்பாடத்திற் பயின்று வந்துள்ள அருஞ்சொற்களும், அப்பாடத்தை மாணவர் நன்கு நினைவு கூறுதற்குரிய வகையில் கேள்விகளும், சொல்லாட்சி, வாக்கிய அமைப்பு, சொற்பொருள் உணர்வு முதலியவற்றுக்கான பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், இவ்வாசக வரிசையைப் பயன்படுத்துவதால், கல்வியிலாக்கா அதிகாரிகள் கருத்தூன்றி வகுத்துள்ள பாடத்திட்டம் ஆரம்பப் பள்ளியிற் பயிலும் மாணவ மாணவிகளுக்கு மிகுந்த நலம் பயக்குமெனக் கூறலாம். ஆதலின், ஆரம்பக் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள அறிஞர் பெருமக்கள் இவ்வாசக வரிசையை ஆதரித்து என்னை ஊக்கியருள்வார்கள் எனும் நம்பிக்கை எனக்குண்டு.

ஆசிரியன்

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	தமிழகம்	... 1
2.	ஊக்கமுள்ள காக்கை	... 6
3.	தமிழுக்கு உழைத்த பெரியார்	... 9
4.	வியாபாரியும் குரங்குகளும்	... 13
5.	கோழி வளர்த்தல்	... 17
6.	குருவும் சீடர்களும் ஆற்றைக் கடத்தல்	... 23
7.	சிவாஜி	... 29
8.	பண்டித ஜவஹர்லால் நேரு	... 34
9.	கடிதங்கள்	... 39
10.	நீதிபதியின் சாதுரியம்	... 43
11.	சோம்பேறிச் சுப்பன்	... 48
12.	சாலை விதிகள்	... 54
13.	சிங்கமும் முயலும்	... 57
14.	ஜயசிங்கு	... 62
15.	மூளைக்கு வேலை	... 67
16.	அஞ்சலகம்	... 68
17.	அன்பின் செயல்	... 74
18.	நாட்குறிப்பு எழுதுதல்	... 79
19.	பயிர்த்தொழில்	... 82
20.	பத்திரிகைச் செய்தி	... 87
21.	பொருட்காட்சிச்சாலை	... 90
22.	அரச நீதி	... 94
	செய்யுட்பகுதி	
	I. சந்திரன்	... 102
	II. மழை பெய்யப் பாடியது	... 103
	III. நல்வழி	... 104

செல்வன்
செந்தமிழ் வாசகம்
ஐந்தாம் புத்தகம்

1. தமிழகம்

1. தமிழ் நமது தாய் மொழி. நாம் குழந்தைப்-பருவத்திலிருந்து இம்மொழியைப் பேசி வருகின்றோம். குழந்தைப் பருவத்தில் நம் தாயார் நம்மை இம்மொழியில் தாலாட்டிப் பாராட்டினர். இத்தமிழ் மொழி வழங்கும் நாடு தமிழ் நாடு. தமிழ் நாடு, '**தமிழகம்**' என வழங்கப்படும்.

2. தமிழகம் இந்திய நாட்டின் தெற்கில் உள்ளது. பண்டைக் காலத்தில் வடக்கே **திருவேங்கடம்** என்னும் மலையும், தெற்கே **குமரி** முனையும், கிழக்கிலும், மேற்கிலும் **கடல்களும்** இதன் எல்லைகளாய் இருந்தன. இக்காலத்தில், மலையாளமொழி வழங்கும் திருவிதாங்கூர்க் கொச்சி நாடு இதன் மேற்கெல்லையாய் இருக்கின்றது. திருவிதாங்கூரின் தென்பகுதியான **நாஞ்சில் நாட்டில்** தமிழ் வழங்குகிறது. **திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னார்க்காடு, வடவார்க்காடு, செங்கற்பட்டு, கோயம்புத்தூர், சேலம்** மாவட்டங்களிலும், **சித்தூர், நீலகிரி** மாவட்-

டங்களின் சில பகுதிகளிலும் தமிழ் வழங்கி வருகிறது. ஆதலின், இப்பகுதிகளையே இக்காலத் தமிழகம் என்று சொல்ல வேண்டும்.

3. தமிழகத்தில் அக்காலத்தில் மூன்று பெரிய அரசுகள் இருந்தன. அவை சேர, சோழ, பாண்டிய

மன்னர்களால் ஆளப்பட்டு வந்தன. சேர நாடு சேரனால் ஆளப்பட்டது. சேரநாட்டுத் தலை நகர் **வஞ்சி.** சேரன் கொடியில் **வில்** அடையாளம் பொறிக்கப்பட்டிருந்தது. பாண்டி நாட்டின் தலை நகர் **மதுரை.** மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது. இச்சங்கத்தில் தமிழ்ப் புலவர்கள் தமிழ் நூல்களை ஆராய்ந்தார்கள். இந்நூல்கள் '**சங்க நூல்கள்**' எனப்படும். பாண்டியர் கொடியில் **மீன்** அடையாளம்

இடப்பட்டிருந்தது. சோழ நாட்டின் தலைநகர் உறையூர். சோழநாடு செழிப்பான நாடு. 'சோழ வளநாடு சோறுடைத்து,' என்று புலவர் கூறியிருக்கின்றனர். சோழர் கொடியில் புலி அடையாளம் இடப்பட்டது.

4. தமிழ் மன்னர்கள் தமிழையும், தமிழ்ப்புலவர்களையும் ஆதரித்து வந்தார்கள்; தமிழ்ப் புலவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவினார்கள். மக்கள் தமிழ் வளர்க்கும் ஆர்வம் உடையவர்களாயிருந்தார்கள். கிராமங்களில் பயிர்த்தொழில் நடைபெற்றது. மக்கள் நூல் நூற்றல், துணி நெய்தல் முதலிய குடிசைத் தொழில்களையும் செய்து வந்தார்கள். தமிழ் நாட்டு வணிகர் பிற நாடுகளுக்குச் சென்று வியாபாரஞ் செய்தனர். கிழக்கேயுள்ள தீவுகளில் தமிழர் குடியேறி, பெருஞ்செல்வம் சம்பாதித்தனர் ; குடியேறிய இடங்களிலும் தமிழ் மொழியையே பேசி வந்தனர். இதனால், தமிழ்மொழி வளர்ச்சியடைந்தது.

5. தமிழ் மொழி, தமிழகத்தில் மட்டுமன்றி, மலாக்கா, சிங்கப்பூர், பினாங்கு முதலிய இடங்களிலும் வழங்குகின்றது. இலங்கை, ஜாவா, சுமத்திரா முதலிய தீவுகளிலும், ஆப்பிரிக்காக் கண்டத்திலும், பர்மாவிலும் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். நம் முன்னோர் தமிழ் மொழியை விருப்பத்துடன் கற்று, ஒற்றுமையுடன் வாழ்ந்து, உயர்வு பெற்றனர். தமிழ் நாடும் பிற நாடுகளால் புகழப்பட்டது. நாமும் தமிழ் மொழியைப் போற்ற வேண்டும். யாவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல அன்புடன் வாழ வேண்டும். ஒருவர்க்கொருவர் உதவி செய்து, ஒற்றுமையுடன் வாழ்ந்தால், தமிழகம் பண்டைப் பெருமையுடன் விளங்கும்.

சொற்கள் :

தமிழகம்	ஒற்றுமை	ஆர்வம்
தாலாட்டி	ஊட்டினுள்	பருவம்
திருவேங்கடம்	குமரி முனை	நாஞ்சில் நாடு
ஆர்க்காடு	மாவட்டம்	உறையூர்
வஞ்சி	மதுரை	பண்டை

கேள்விகள் :

1. 'தமிழகம்' என்பது யாது ?
2. தமிழகத்தின் முற்கால எல்லைகள் யாவை ?
3. இக்காலத்தில் தமிழ் வழங்கி வரும் இடங்கள் எவை ?
4. தமிழகத்தில் இருந்த மூன்று அரசுகள் யாவை ?
5. அவற்றைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?
6. தமிழ் மன்னர் தமிழை எவ்வாறு வளர்த்தனர் ?
7. தமிழ் மக்களின் வாழ்க்கையைப்பற்றி நீ அறிந்தது யாது ?
8. தமிழ் மக்கள் வாழ்கின்ற இடங்கள் யாவை ?
9. தமிழகம் பண்டைப் பெருமையுடன் விளங்க நாம் என்ன செய்ய வேண்டும் ?

பயிற்சி :

1. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொல்லால் நிரப்பு:
   (1) குழந்தைப் —— நமது —— நம்மை இம்மொழியில் —— பாராட்டினுள்.
   (2) அவை, ——, ——, பாண்டிய —— ஆளப்பட்டு வந்தன.
   (3) 'சோழ —— சோறுடைத்து'.
   (4) மக்கள் ——, துணி நெய்தல் —— —— செய்து வந்தனர்.

2. எதிர்ச்சொற்கள் எழுது :—

சிறிய ×
விருப்பத்துடன் ×
பெருமை ×

3. பின் வருவனவற்றைக்கொண்டு வாக்கியங்கள் எழுது :—

வழங்கும், பொறிக்கப்பட்டிருந்தது, குடியேறினர், வளர்ச்சியடைந்தது.

4. பிரித்தெழுது :—

தமிழகம் = தமிழ் + அகம்.
தமிழறிந்தான் =
தேரேறினன் =
அவனேடினன் =

இலக்கணம் :

எழுத்துக்கள் :

அ — உயிரெழுத்து. ழ் — மெய்யெழுத்து.

இரண்டும் சேர்ந்த எழுத்து ழ. இது உயிர்மெய் எழுத்து. மெய்யெழுத்தின் பின் வரும் உயிரெழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும். உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு :—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ ஐ, ஒ, ஓ, ஔ.

மெய்யெழுத்துக்கள் பதினெட்டு :—க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

உயிர்மெய்யெழுத்துக்கள்—இருநூற்றுப் பதினறு.

அவை 'க' முதல் 'னௌ' இறுதியாய் உள்ளவை. 'க்' என்னும் மெய்யுடன் பன்னிரண்டு உயிர்கள் சேர, ககர வரிசையில் பதினெட்டு உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாகும். இவ்வாறே, பதினெட்டு மெய்களுடன் தனித்தனியே பன்னிரண்டு உயிர்களும் சேர, இருநூற்றுப் பதினறு உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாகும்.

2. ஊக்கமுள்ள காக்கை



இப்படங்களிலிருந்து நீ அறியும் கதையை எழுது.

பயிற்சி :

1. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை முடித்துக் காட்டு :—

(1) காகம் ஒன்று தண்ணீர் கிடையாமல் ——. (தவித்தது, அலைந்தது, இங்குமங்கும் பறந்தது).

(2) அது ஒரு வீட்டின் பின்புறத்தில் இருந்த மண்சாடியை ——. (கண்டது, உருட்டினது.)

(3) சாடியின் அடிப்பாகத்தில் சிறிது தண்ணீர் ——. (தெரிந்தது, இருந்தது.)

(4) காகம் சிறு சிறு கற்களைப் பொறுக்கிவந்து, அவற்றைச் சாடியினுள் ——. (போட்டது, இட்டது.)

(5) தண்ணீர் மேலே ——. (வந்தது, எழுந்தது.)

(6) காகம் தண்ணீரைக் குடித்துத் தாகம் ——. (நீங்கியது, தீர்ந்தது.)

(7) ஊக்கமுடையவர் தாம் எண்ணிய காரியத்தை ——. (முடிப்பர், செய்வர்.)

2. பொறுக்கி, வந்து, எண்ணிய, பறந்தது —— இவை என்ன சொற்கள் ?

இலக்கணம் :

சுட்டெழுத்து :

முதல் வாக்கியத்திலுள்ள ' காகம் ' என்பதை இரண்டாம் வாக்கியத்திலுள்ள ' அது ' என்னும் சொல் சுட்டுகின்றது. அது போல, ' இராமன் கடைக்குச் சென்றான். அவன் பழம் வாங்கினான்,' என்ற வாக்கியங்களில் ' அவன் ' என்ற சொல், இராமனைச் சுட்டுகின்றது. இவ்வாறு, ஒரு பொருளைச் சுட்டுகின்ற சொல் சுட்டுச் சொல் எனப்படும். சுட்டுவதற்கு உதவும் எழுத்துச் சுட்டெழுத்து எனப்படும்

இராமன் ஓடினுன் — அவன் விழுந்தான்.

சீதை பாடினுள் — அவள் ஆடினுள்.

பசு மேய்ந்தது — அது அசை போட்டது.

'அ' என்ற எழுத்துப் பொருளைச் சுட்ட உதவுகின்றது. ஆதலின், அ சுட்டெழுத்தாகும்.

தமிழில், அ, இ என்ற எழுத்துக்கள் சுட்டெழுத்துக்களாகும்.

(உ - ம்.) அம்மரம், இக்குதிரை, அம்மனிதன், இவ்வாடு.

ஆய்த எழுத்து :

அது = அஃது — ஃ — மூன்று புள்ளி வடிவமான எழுத்து, ஆய்த எழுத்து. இது உயிர் எழுத்தையும் மெய்யெழுத்தையும் சேராமல், தனித்து நிற்கும் எழுத்து. இதனைத் ' தனி நிலை ' என்றும் வழங்குவர்.

இந்த ஆய்த எழுத்தைச் சேர்த்தால், தமிழில் மொத்தம் எத்தனை எழுத்துக்கள் ஆகும் ?

3. தமிழுக்கு உழைத்த பெரியார்

1. பண்டைத் தமிழகத்தில் புலவர் பலர், நூல்கள் பல இயற்றினர். அவற்றைத் தமிழ் மக்கள் படித்து அறிவு பெறுகின்றார்கள். அண்மையில் பலர் தமிழுக்காக உழைத்துப் புகழ் பெற்றுள்ளனர். அவர்களுள் காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார் ஒருவர். இவர் 1876-ஆம் ஆண்டு, பெப்புருவரி மாதம், 20-ஆம் தேதி, காவேரிப்பாக்கத்தில் பிறந்தார். இவர் தந்தையார், இராமசாமி முதலியார்; தாயார், அகிலாண்டவல்லி அம்மையார்.

2. இவர் தம் தந்தையாரிடம் ஆரம்பக் கல்வி பயின்றார். சென்னை நகரில் வாழ்ந்த **மயிலை மகாவித்துவான் சண்முகம் பிள்ளை** இவர்க்குத் தமிழாசிரியர். இவர் ஆசிரியரிடம் மிகுந்த அன்பு கொண்டவர்; அவரிடம் பல நூல்களைப் பயின்று, தமிழில் சிறந்த அறிவு பெற்றவர்; அவரைத் தம் தந்தையாராகவே பாவித்தவர்; அவர் இறந்தபின், அவருடைய மனைவியாருக்குப் பொருளுதவி செய்து காப்பாற்றியவர்.

3. முதலியார் சென்னை வேப்பேரியில் உள்ள திருப்பவுல் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராயிருந்து, மாணவர் மகிழத் தமிழ் கற்பித்து வந்தார்; பின்பு, சென்னை மேரி ராணியார் கல்லூரியிலும், சென்னை மாகாணக் கல்லூரியிலும், தமிழ்ப் பேராசிரியராய் இருந்து, பலரும் புகழத் தொண்டாற்றினர். சென்னைத் தமிழ்ப்பாட புத்தகக் குழுவினரின் தலைவராயுமிருந்தார். 1917-ஆம் ஆண்டு இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் தமிழ்த் தேர்வுகளுக்குத் தலைமைப் பரிசோதகராய் நியமிக்கப்பட்டார்.

4. இவர் **நல்லாசிரியன்** என்னும் பத்திரிகையை மாதமொரு முறை வெளியிட்டு வந்தார். சிறுவர்களுக்காகத் தமிழ்ப்பாட புத்தகங்கள் பல எழுதினர்; பல செய்யுட்களும் இயற்றியிருக்கின்றார்.

5. இவர் தமிழாசிரியர்களை அன்புடன் தம் வீட்டிற்கு அழைத்து உபசரிப்பார். அவர்களுக்குப் பொருளுதவியும் செய்திருக்கிறார். இவரிடம் உதவி பெற்றவர் பலர். இவர் பிறரிடமுள்ள நற்குணங்களைக் கண்டு பாராட்டுவார்.

6. முதலியார் தம் சொந்த முயற்சியினால் முன்னுக்கு வந்தவர். இவர் தமிழ் வளர்ச்சிக்காகப் பல

சங்கங்களை ஏற்படுத்தி, பல நூல்களை வெளியிட்டார்; தமிழுக்காகவே தம் வாழ்நாள் முழுவதும் உழைத்து வந்தார். தமிழ் மக்கள் இப்பெரியாரை என்றும் நினைத்துப் போற்ற வேண்டும்.

சொற்கள் :

காவேரிப்பாக்கம்	வித்துவான்	வாழ்நாள்
ஆரம்பக்கல்வி	கல்லூரி	புனிதம்
முன்னேற்றம்	பேராசிரியர்	குழு
பரிசோதகர்	பல்கலைக்கழகம்	தேர்வு

கேள்விகள் :

1. நமச்சிவாய முதலியாரின் தாய்தந்தையர் யாவர்?
2. அவர் தமிழாசிரியர் யார்?
3. அவர் நன்றி மறவாதவர் என்பதை எதனால் அறியலாம்?
4. அவர் எந்தெந்த இடங்களில் தமிழ்த்தொண்டு செய்தார்?
5. அவர் தமிழுக்குச் செய்த சேவை யாது?
6. அவருடைய குணத்தைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

பயிற்சி :

1. அண்மை, முயற்சி, பயின்று, குழு—இச் சொற்களையமைத்து வாக்கியங்கள் எழுது.
2. எதிர்ச்சொற்களை இணைத்தெழுது :—
   சிலர், அறிவு, பலர், அறியாமை, அன்பு, பிற்போக்கு, பகை, முன்னேற்றம்.
3. பிரித்தெழுது :—
   தமிழாசிரியர், பொருளுதவி.

இலக்கணம் :

சேர்த்தெழுது :—

அ + கல்லூரி = அக்கல்லூரி.
இ + பெரியார் =
அ + மனிதன் =
இ + மரம் =

அ, இ என்பன சுட்டெழுத்துக்கள். இவற்றின் பின்வரும் சொல்லின் முதலிலுள்ள மெய் எழுத்து மிகுந்து வரும்.

இ + ஆறு = இவ்வாறு.
அ + ஆடு = அவ்வாடு.

சுட்டெழுத்தின் பின் வரும் சொல்லின் முதலெழுத்து உயிரெழுத்தாய் இருந்தால், 'வ்' என்னும் மெய் மிகும்.

2. இவற்றைப் படி :—

அ, இ, உ, எ, ஒ—இவை குறுகிய ஓசையுடையவை. ஆகையால், குற்றெழுத்துக்கள் எனப்படும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—இவை நீண்ட ஓசை உடையவை. ஆதலால், நெட்டெழுத்துக்கள் எனப்படும்.

அ—ஆ	இ—ஈ	உ—ஊ
எ—ஏ	ஐ—இ	ஒ—ஓ
	ஔ—உ	

கட்டங்களில் உள்ள எழுத்துக்கள் ஒன்றற்கு ஒன்று இனவெழுத்தாகும்.

4. வியாபாரியும் குரங்குகளும்

குல்லாவிற்கும் வணிகன் அவன்
உல்லாசமாய்க் காட்டின்வழி
செல்லவெயில் வெம்மையினுல்
சென்றமர்ந்தான் மரநிழலில். 1



நிழலருமை தானுணர்ந்தே
நித்திரையில் ஆழ்ந்திடவே
அழகியகுல் லாக்களைவந்
தவிழ்த்தெடுத்த வானரங்கள். 2

தலைக்கொன்ருத் தூக்கிப்போய்த்
தலையில்வைத்துக் கொண்டனவே;
மலைத்து நின்ருன் விழித்தவனும்
மரத்திருந்த குரங்குகளை. 3

எடுத்தெறிந்தான் குல்லாவை
எழுந்தபெருங் கோபத்தினால் ;
எடுத்தெறிந்த குரங்குகளும்
இப்படியே அவன்பின்னே. 4

அள்ளியெடுத் தானவற்றை
அவசரமாய்ச் சேர்த்திட்டான் ;
உள்ளங்களி சிறந்திடவே
ஊர்நோக்கி வழிநடந்தான். 5

சொற்கள் :

குல்லா	உல்லாசம்	வெம்மை
நிழல்	நித்திரை	அவிழ்த்து
வானரங்கள்	குரங்குகள்	மலைத்து
விழித்த	எழுந்த	அள்ளி
உள்ளம்	அவசரமாய்	மீண்டும்

கேள்விகள் :

1. குல்லா வியாபாரி மரநிழலில் உட்காரக் காரணம் என்ன ?

2. அவன் உறங்கியதும், குரங்குகள் செய்தது என்ன?

3. அவன் தன் குல்லாவை எடுத்துக் கீழே எறிந்ததும், நடந்தது என்ன?

பயிற்சி :

1. தலை, தளை; எறிந்த, எரிந்த—இச்சொற்களின் பொருள் வேறுபாட்டை விளக்க வாக்கியங்கள் எழுது.

2. நித்திரை, வானரங்கள், களி—இப்பொருள் உள்ள வேறு சொற்கள் எழுது.

3. பிரித்தெழுது :—

அங்கமர்ந்தான், செய்தானவன், எடுத்தவற்றை.

இலக்கணம் :

உடம்படுமெய் :

அள்ளி + எடுத்து = அள்ளியெடுத்து—அள்ளி + ய் + எடுத்து.

நீ + எழுதினாய்—நீயெழுதினாய்—நீ + ய் + எழுதினாய்.

அருமை + உணர்ந்து = அருமையுணர்ந்து — அருமை + ய் + உணர்ந்து.

இ, ஈ, ஐ என்ற உயிரெழுத்துக்களை இறுதியிலுடைய சொற்களுடன், உயிரெழுத்துக்களை முதலில் உடைய சொற்கள் சேரும்போது, அவற்றின் இடையில் ய் என்னும் மெய் தோன்றும். அந்த மெய்யுடன் இரண்டாம் சொல்லி லுள்ள உயிர் சேரும். அந்த மெய், 'உடம்படுமெய்' என்று வழங்கப்படும்.

சேர்த்தெழுது :—

மணி + அடித்தது =

தீ + எரிந்தது =

பனை + ஓலை =

மெய்யெழுத்துக்களின் இனம் :

மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. அவை, வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகையாக வழங்கப்படும்.

வலிய ஒலியை உடைய எழுத்துக்கள்	மென்மையான ஒலியை உடைய எழுத்துக்கள்	இடைத்தரமான ஒலியை உடைய எழுத்துக்கள்
க	ங	ய
ச	ஞ	ர
ட	ண	ல
த	ந	வ
ப	ம	ழ
ற	ன	ள

வல்லின எழுத்துக்கள்—க, ச, ட, த, ப, ற.

மெல்லின எழுத்துக்கள்—ங, ஞ, ண, ந, ம, ன.

இடையின எழுத்துக்கள்=ய, ர, ல, வ, ழ, ள.

க—ங	ச—ஞ	ட—ண	த—ந
ப—ம	ய, ர, ல, வ, ழ, ள		ற—ன

கட்டங்களிலுள்ள எழுத்துக்கள் ஒன்றற்கு ஒன்று இனவெழுத்தாகும்.



5. கோழி வளர்த்தல்

1. நமது நாட்டில் பெரும்பாலார் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்கள் பயிர்த்தொழில் செய்கின்-றார்கள். பயிர்த்தொழிலால் கிடைக்கும் ஊதியம் அவர்கள் வாழ்க்கைச் செலவுகளுக்குப் போதுமான-தாய் இல்லை. ஆதலால், அவர்கள் வேறு தொழிலேயும் செய்து வரவேண்டும். இக்காலத்தில் **தேனீ வளர்த்-தல், மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல்** முதலியவை கிராம மக்கள் செய்து வரும் குடிசைத்-தொழில்களாகும். இவற்றுள், கோழி வளர்ப்பதற்கு அதிகமான பொருள் வேண்டா. ஆதலின், கோழி வளர்க்கும் முறையைப் பற்றிப் படிப்போம்:

2. கோழிகளில் மிகுதியான முட்டைகள் இடும் இனமும், சில முட்டைகளே இடும் இனமும் உள்ளன. **லெக்ஹார்ன், ரோட்ஸ்** என்னும் இனக்கோழிகள் மிகுதியான முட்டைகளை இடும். நாட்டுக் கோழிகள் சில முட்டைகளே இடும். ஆதலின், முட்டையினம்

என்று வழங்கப்படும் லெக்ஹார்ன், ரோட்ஸ் என்னும் கோழிகளை வாங்கிக் கோழி வளர்க்கும் தொழிலை ஆரம்பிக்கலாம்.

3. கோழிகளுக்குக் கூடுகள் அமைக்க வேண்டும். திறந்த வெளிகளில் அவற்றை மேய விடுதல் கூடாது. காற்றோட்டமுள்ள இடங்களில் கூடுகள் அமைய வேண்டும். கோழி ஒன்றுக்கு மூன்று சதுர அடி இடம் போதும். ஆறு அடி நீளமும், ஐந்து அடி அகலமும், ஐந்து அடி உயரமுமுள்ள கூட்டில் பத்துக் கோழிகளை விட்டு வளர்க்கலாம். தரை சுண்ணாம்பு பூசப்பட்டதாய் இருந்தால், அடிக்கடி கூட்டைச் சுத்தப்படுத்துவதற்கு வசதியாயிருக்கும். கூட்டின் நான்கு பக்கங்களிலும் வலைக்கம்பி அடிக்கவேண்டும். வெயிலிலும் மழையிலுமிருந்து கோழிகளைப் பாதுகாக்க, கூட்டின் மேற்கூரையைப் பலகையினால் அமைக்க வேண்டும். தார் பூசிய பாயையும் அதற்கு உபயோகிக்கலாம்.

4. கூட்டினுள், கோழிகள் உட்காருவதற்குச் சட்டங்களும், முட்டையிடுவதற்குப் பெட்டிகளும், தீனிக்கும் தண்ணீருக்கும் தனித்தனி பாத்திரங்களும் இருக்க வேண்டும். இரண்டங்குலக் கனமுள்ள சட்டங்களைத் தரையிலிருந்து ஒன்றரையடி உயரத்தில் அமைக்க வேண்டும். அச்சட்டங்களுக்குக் கீழே மலங்கள் தங்குவதற்குப் பலகைகளை இட்டு, அவற்றின்மீது மணல் பரப்பவேண்டும். எளிதாகச் சுத்தஞ்செய்ய இவை உதவும். முட்டையிடும் பெட்டியினுள் வைக்கோல், புல் முதலியவற்றைப் பரப்பி வைக்க வேண்டும்.

5. கோழிகளுக்கு ஒரு நாளில் மூன்று முறை தீனி போட வேண்டும். தானியங்களும், தவிடும்

அவற்றிற்கு ஏற்ற தீனியாகும். தவிட்டுடன் சிறிது கிளிஞ்சில் தூளைக் கலந்து வைப்பது நல்லது.



முட்டையிடும் கோழிகளுக்கு முட்டையோடுகளைத் தூளாக்கித் தீனியுடன் கலந்து வைப்பார்கள். இவ்வாறு செய்வதால், முட்டையோடுகள் கடினமாயிருக்கும். முள்ளங்கிக்கீரையையும், வெங்காயத்தையும் குறுக அரிந்து போடுதல் வேண்டும். குடிதண்ணீர்ப் பாத்திரத்திலுள்ள நீரை ஒரு நாளில் மூன்று முறை மாற்ற வேண்டும். பொட்டாசியம் பெர்மாங்கனேட்டுக் கலந்த நீரில் தீனியைக் கழுவ வேண்டும். நோய்க் கிருமிகள் அணுகாதவாறு கூடுகள் சுத்தமாய் இருக்க வேண்டும். கூட்டினுள் செல்கின்றவர்களும் தங்கள் பாதங்களைக் கழுவிக்கொண்டு செல்ல வேண்டும்.

6. கோழிகளுக்குக் கழிச்சலும், அம்மை

நோயும் ஏற்படும். நோய் கண்ட கோழியை உடனே அப்புறப்படுத்திவிட்டுக் கூட்டைச் சுத்தஞ் செய்ய வேண்டும். கோழிக் குஞ்சுகளைக் கவனமாகப் பாது-காக்க வேண்டும். அவற்றிற்கு நொய்யையும், கறை-யானையும் தீனியாகக் கொடுக்க வேண்டும். மோரும் அவற்றிற்கு வளர்ச்சியை உண்டாக்கும்.

7. கோழிகளை நோயணுகாமல் பாதுகாத்து வந்தால், அவை சீக்கிரம் பலவாகப் பெருகும். அதனால், ஊதியமும் மிகுதியாகக் கிடைக்கும். எளிதாகச் செய்யத்தக்க குடிசைத் தொழில் கோழிப்-பண்ணை வைத்தலேயாகும்.

சொற்கள் :

பெரும்பான்மை	ஊதியம்	செலவு
தேனீ	முறை	சுண்ணும்பு
காற்ரேட்டம்	அடிக்கடி	வலைக்கம்பி
ஒன்றரை	பரப்ப	தார்
தானியம்	கிளிஞ்சில்	முள்ளங்கி
குறுக	கிருமிகள்	கறையான்

கேள்விகள் :

1. கிராம மக்கள் செய்வதற்குத் தக்க குடிசைத்-தொழில்கள் எவை ?

2. கோழிப் பண்ணையில் வைத்து வளர்ப்பதற்குத் தகுந்த கோழிகள் எவை ?

3. கோழிக் கூடுகளை எவ்வாறு அமைக்கவேண்டும் ?

4. கோழிக் கூட்டினுள் வைக்க வேண்டிய பொருள்-கள் எவை ?

5. கோழிகளுக்கு என்ன தீனி இட வேண்டும்?

6. கோழிகளைப் பாதுகாக்கும் முறை யாது?

பயிற்சி :

1. எளிதாக, நுண்ணிதாக, பெருகும்—இவற்றிற்கு எதிர்ச்சொற்கள் எழுது.

2. சேர்த்தெழுது :—

காற்று	+	ஓட்டம்	=	காற்றோட்டம்.
ஐந்து	+	அடி	=	
இரண்டு	+	அடி	=	
ஒன்று	+	அரை	=	

இலக்கணம் :

உடம்படு மெய் : (தொடர்ச்சி)

பல	+	ஆடு	=	பலவாடு	—பல +வ்+ஆடு
நிலா	+	உதித்தது	=	——	—நிலா +வ்+உதித்தது
திரு	+	அருள்	=	——	—திரு +வ்+அருள்
பூ	+	அழகு	=	——	—பூ +வ்+அழகு
தே	+	ஆரம்	=	——	—தே +வ்+ஆரம்
கோ	+	இல்	=	——	—கோ +வ்+இல்

இ, ஈ, ஐ அல்லாத பிற உயிரெழுத்துக்களுடன், உயிரெழுத்துக்களை முதலில் உடைய சொற்கள் சேரும்போது, **வ்** என்ற மெய் தோன்றும். இதுவும் உடம்படு மெய் என்று வழங்கப்படும்.

சேர்த்தெழுது :—

மலை + உச்சி =

மது + அருந்தாதே =

வினவெழுத்து :

இவன் யார் ? இதில் 'யார்' என்னும் சொல்லில் உள்ள 'யா' என்னும் எழுத்தே வினப்பொருளைத் தருகிறது. வினப் பொருளைத் தரும் எழுத்து வினவெழுத்தாகும்.

எது ? ஏன் ? யாவர் ?	இவை வினச் சொற்கள். இவற்றில், எ, ஏ, யா என்பன வினவெழுத்துக்கள்.

அவன் வந்தானு ? வந்தான் + ஆ—'ஆ' வின-வெழுத்து.

அவன் திருடினனே ? திருடினன் + ஓ—'ஓ' வின-வெழுத்து.

எ, ஏ, யா, ஆ, ஓ—என்பன வினவெழுத்துக்கள்.

கீழ் வருவனவற்றுள் வினவெழுத்துக்களைக் குறிப்-பிடு :—

எருது, என்ன, யாதவர், யாவன், ஏடு, ஏன், ஆடு, இராமனு, ஓது, இவனே.

6. குருவும் சீடர்களும் ஆற்றைக் கடத்தல்

1. **அவிவேக பூரணகுரு** என்ற ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவருடைய மாணவர்கள் **மட்டி, மடயன், பேதை, மிலேச்சன், மூடன்** என்பவர்கள். அவர்கள் ஒரு நாள் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்துக்குச் சென்றார்கள். திரும்பும் வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அவர்கள் அதில் இறங்கப் பயந்தார்கள். நேரமும் நள்ளிரவாய் இருந்தது.

2. குரு மிலேச்சனைப் பார்த்து, ''மிலேச்சா, ஆறு தூங்குகிறதா, விழித்திருக்கிறதா என்று பார்த்துவா,'' என்றார். அவன் சுருட்டுப் பற்றவைக்கக் கொள்ளிக்கட்டையை வைத்திருந்தான். அவன் அதைக் கொண்டு போய் ஆற்றின் நீரைத்

தொட்டான். அது 'சுரீர்' என்றது. மிலேச்சன் பயந்து, நடுங்கிக்கொண்டே குருவினிடம் ஓடி-வந்து, "ஐயா, ஆறு விழித்துக்கொண்டுதான் இருக்கிறது! நான் தொட்டவுடன் நாகம் போலச் சீறி வந்தது! நான் உயிர் பிழைத்து வந்ததே அதிசயம்!" என்றான். குரு அதைக் கேட்டு, "அப்பா, ஆறு தூங்கும் வரை இங்குக் காத்திருப்-போம்," என்றனர். அவர்கள் பொழுது புலரும் வரை அங்குத் தங்கினார்கள்.

3. அந்த ஆற்றின் செயல்களைப் பற்றி ஒவ்வொருவரும் தாம் அறிந்ததைக் கூறினர். மட்டி என்பவன், "சுவாமி, என் பாட்டனார் பெரிய வியா-பாரி; அவர் உப்புப் பொதி ஏற்றிய இரண்டு கழுதை-களை ஓட்டிக்கொண்டு வந்தார்; வழியில், இந்த ஆற்றில் இறங்கிக் குளித்தார்; தம் கழுதைகளையும் குளிப்பாட்டினார். அக்கரைக்குச் சென்ற பொழுது, கழுதைகளின் மீது இருந்த உப்பைக் காணவில்லை. ஊசியினால் தைக்கப்பட்டிருந்த கோணிப்பையைத் திறக்காமலே, அதனுள்ளிருந்த உப்பை ஆறு தின்று-விட்டது! உப்பைத் தின்ற ஆறு தம்மை விழுங்காமல் விட்டுவிட்டதே என்று அவர் சந்தோஷப்பட்டார்," என்று கூறினான். மட்டி கூறியதைக் கேட்டு அவர்கள் பின்னும் அதிகமாய்ப் பயந்தார்கள்.

4. குருவின் கட்டளையின்படி, மிலேச்சன் திரும்பவும் கொள்ளிக் கட்டையைக் கொண்டுபோய், ஆற்றின் நீரைத் தொட்டான். அதிலுள்ள நெருப்பு முன்னமே அவிந்து போனதனால், அது சிறிதும் புகையவில்லை. அதைக் கண்ட அவன் ஓடி வந்து, "ஆறு நித்திரை செய்கிறது! சத்தம் செய்யாமல் ஆற்றைக் கடந்து செல்வோம்!" என்றான். உடனே,

அவர்கள் ஒருவரையொருவர் சேர்த்துக் கட்டிக்கொண்டு, ஆற்றில் இறங்கி, ஒவ்வோர் அடியாகத் தண்ணீருக்குள் வைத்து, ஊன்றிப் பின்பு பெயர்த்து, இலகுவாக நதியைக் கடந்தார்கள்.

5. அவர்கள் கரையேறினதும் மகிழ்ச்சியால் கூத்தாடினுர்கள். பின்பு, மூடன், "நாமெல்லாரும் அபாயமில்லாமல் வந்து சேர்ந்தோமா? எண்ணிப் பார்ப்போம்!" என்று சொல்லி, எண்ணத் தொடங்கி, தன்னை நீக்கி மற்றவர்களை எண்ணினுன். ஐவரே இருந்தனர். அவன், ஐயோ! இதென்ன! ஒருவன் ஆற்றோடு போய்விட்டானே!" என்று அழுதான். குரு அவனை அழவேண்டா என்று கூறித் தாமே எண்ணிப் பார்த்தார். அவரும் தம்மை நீக்கி எண்ணி, ஐவரே எனக் கணக்கிட்டார். மற்றவர்களும் அவ்வாறே எண்ணி, ஆறு பேர்க்கு ஒருவன் குறைந்தமையால், ஒருவனை ஆறு விழுங்கிவிட்டதெனத் தீர்மானித்துக்கொண்டனர். குருவும் மாணவரும் அழுதனர்.

6. அந்தச் சமயத்தில், வழிப்போக்கனொருவன் அங்கு வந்தான். அவன் அவர்கள் அழுவதைக் கண்டு, அவர்கள் அழுததன் காரணத்தைக் கேட்டு அறிந்தான். அவன் அவர்களிடம் "நான் மந்திர வித்தைக்காரன்; எனக்கு நல்ல வெகுமதி கொடுத்தால், ஆற்றோடு போனவனை அரைக் கணத்தில் அழைப்பிக்கிறேன்," என்றுன். அதைக் கேட்ட குரு "அப்பா, தயவு செய்து காணுமற் போனவனை அழைப்பி! எங்கள் செலவுக்கு வைத்திருக்கும் பணத்தை உன் கையில் கொடுத்துவிடுகிறோம்!" என்றுர்.

7. அவன் தன் கையிலிருந்த இரும்புப் பூண்

கட்டப்பட்ட தடியை அவர்களுக்குக் காட்டி, "நான் சொன்ன மந்திரவித்தை இதிலேதான் இருக்கிறது; நீங்கள் வரிசையாக நில்லுங்கள்; நான் ஒவ்வொருவர் முதுகிலும் இத்தடியால் அடிப்பேன்; ஒவ்வொருவரும் அவரவர் பெயரைச் சொல்லி எண்ண வேண்டும்" என்றான். அவர்கள், 'நல்லது!' என்று சம்மதித்தார்கள்.

8. மந்திர வித்தைக்காரன் அவர்களை வரிசையாக நிறுத்தினான்; பின்பு, தன் தடியை ஓங்கிக் குருவின் முதுகில் பலமாக ஓரடி அடித்தான். அவர், "அப்பாடா! நான்தான் பரமார்த்த குரு; ஒன்று," என்று எண்ணினார். இப்படியே அவன் ஒவ்வொருவரையும் அடித்தான். ஒவ்வொருவரும் தம் தம் பெயரைச் சொல்லி எண்ண, முடிவில் அடி வாங்கியவன் தன் பெயரைச் சொல்லி 'ஆறு' என்றான். அவர்கள், ஆறு பேரும் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, தாங்கள் வைத்திருந்த பணத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள்.

சொற்கள்:

பரமார்த்த குரு	அதிசயம்	மந்திரவித்தை
நள்ளிரவு	பொதி	வெகுமதி
நாகம்	மடயன்	சம்மதித்தான்
பெயர்த்து	மிலேச்சன்	அரைக்கணம்
மட்டி	கொள்ளிக் கட்டை	பலமாக
பேதை	புலரும்	இருப்புப் பூண்
சுருட்டு	கோணிப்பை	முடிவில்

கேள்விகள் :

1. அவிவேக பூரணகுருவின் மாணவர் பெயர்கள் யாவை ?

2. ஆறு விழித்திருப்பதாக மிலேச்சன் கூறக் காரணம் என்ன ?

3. ஆற்றைப் பற்றி மட்டி என்ன கூறினான் ?

4. அவர்கள் ஆற்றை எப்படிக் கடந்தார்கள் ?

5. அவர்கள் ஆற்றைக் கடந்த பின் ஏன் அழுதார்கள் ?

6. அவர்கள் அழுகையை எவன் எவ்விதம் போக்கினான் ?

பயிற்சி :

1. இரு பொருள்கள் எழுது :—
ஆறு, வரிசை, சுருட்டு, எண்ணி.

2. எதிர்ச்சொல் எழுது :—
விவேகம், பேதை, தூங்கு, பிழைத்தான்.

3. ஒரே பொருளுள்ள சொற்களை ஒன்றன்பின் ஒன்ருய் வரிசைப்படுத்தியெழுது :—
மட்டி, அதிசயம், மடயன், ஆச்சரியம், சம்மதித்தான், மூடன், உடன்பட்டான்.

4. இரங்கி, இறங்கி ; குளி, குழி—இச்சொற்களின் பொருள் வேறுபாட்டை விளக்க இவைகளை உபயோகித்து வாக்கியங்கள் எழுது.

5. பிரித்தெழுது :—
தொட்டவுடன், அதனுள்ளிருந்த, இத்தடி, ஒருவரையொருவர், இருப்புப்பூண்.

6. இக்கதை எட்டுப் பிரிவாகப் பிரிக்கப்பட்டு அந்தந்தப் பிரிவின் தொடக்கத்தில், 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என்ற இலக்கங்கள் இடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவையும் 'பாரா' அல்லது 'பத்தி' என்று வழங்கலாம். ஒவ்வொரு பத்தியும் ஒவ்வொரு விஷயத்தை விளக்கமாகக் கூறும்.

முதல்பத்தி—குருவும் சீடர்களும் யாவர் என்பதையும், அவர்கள் ஆற்றின் கரைக்கு வந்த காரணத்தையும் தெரிவிக்கும்.

இரண்டாம் பத்தி—ஆறு தூங்குகிறதா விழித்திருக்கிறதாவெனச் சோதித்தல்.

மூன்றும் பத்தி—மட்டி ஆற்றைப் பற்றிக் கூறிய வரலாறு.

நான்காம் பத்தி—ஆற்றைக் கடந்த விதம்.

ஐந்தாம் பத்தி—அவர்கள் அழுததன் காரணம்.

ஆறும் பத்தி—அவர்கள் மந்திர வித்தைக்காரனுடன் செய்த ஒப்பந்தம்.

ஏழாம் பத்தி—மந்திர வித்தைக்காரன் கூறிய உபாயம்.

எட்டாம் பத்தி—அவன் தன் மந்திரவித்தையால் காணமற்போனவனை மீண்டும் வரச்செய்தல்.

கதைகள் இவ்வாறு பத்தி பத்தியாக, ஒவ்வொரு நிகழ்ச்சியையும் விளக்கித் தொடர்ச்சியாக எழுதப்பட வேண்டும்.

தெரிந்த கதையொன்றைப் பத்தி பிரித்து எழுது.

7. இப்பாடத்தில் முதற்பத்தியில் காற்புள்ளிகள் இடப்பட்டுள்ளதைக் கவனித்து, அவை இடப்படவேண்டிய காரணத்தை எழுது.

ஐந்தாம் பத்தியில், 'பின்பு' என்ற சொல்லின் பின் காற்புள்ளி இடப்பட்டிருத்தலைக் கவனி.

பின்பு, முன்பு, ஆதலின், ஆகையால் என்ற சொற்களின் பின், காற்புள்ளி இடுதல் வேண்டும்.

ஏழாவது பத்தியில் அரைப்புள்ளி (;) இடப்பட்டிருப்பதைக் காணலாம். கருத்துக்கள் அடுக்கி வரும் முற்று வாக்கியங்களின் பின் அரைப்புள்ளி இடவேண்டும்.

8. இப்பாடத்திலிருந்து, உணர்ச்சிக் குறி, மேற்கோட்குறி, அரைப்புள்ளி, கேள்விக்குறி இவை வந்துள்ள வாக்கியங்களை எடுத்தெழுது.

7. சிவாஜி

1. வடவிந்தியாவில் **மராத்தி** மொழி பேசும் வகுப்பார் வாழ்கின்றனர். அவர்கள் வாழும் தேசம் **மகாராஷ்டிரம்** என்று வழங்கப்படும். மராத்தியர் பல குடும்பங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். அக்குடும்பங்களுள் **பான்ஸ்லே** குடும்பத்தில் **ஷாஜி** என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியின் பெயர் **ஜீஜாபாய்** என்பது. ஷாஜி ஆமது நகர்ச் சுல்தானிடம் குதிரைப்படைத் தலைவராயிருந்தார்; சில ஆண்டுகள் கழிந்த பின், பீஜபூர்ச் சுல்தானிடம்

வேலைக்கு அமர்ந்தார். அச்சமயத்தில், சிவாஜி பிறந்தார்.

2. சிவாஜி தம் கிராமத்தில் தம் தாயுடன் கிராமத்தில் வாழ்ந்தார். ஜிஜாபாய் தெய்வபக்தி உடையவள். இராமாயண பாரதக் கதைகளை அவள் தன் மைந்தருக்குச் சொல்லி, அவரை நல்வழியில் பழக்கினாள். சிவாஜி எழுதப் படிக்கத் தெரியாதவராயினும், இக்கதைகளைக் கேட்டே அறிவு பெற்றார்.

3. குதிரையின்மீது சவாரி செய்வதில், சிவாஜிக்கு மிகுந்த விருப்பமுண்டு. அவர் போர் செய்வதில் விருப்பமுடையவர்; மலை வாசிகளைப் போரில் பழக்கினார். தமது இருபதாம் வயதில் பீஜப்பூர்ச் சுல்தானுக்குச் சொந்தமான **தோர்ணக் கோட்டை**யைச் சிவாஜி கைப்பற்றினார். இது அவரது உயர்வுக்குக் காரணமாயிற்று.

4. சிவாஜி பீஜப்பூர்ச் சுல்தானுக்குச் சொந்தமான பலவிடங்களையும் தம் வசமாக்கினார். இதனால், பீஜப்பூர்ச் சுல்தான் சிவாஜியை அடக்க, **அப்ஸல்கான்** என்பவனை அனுப்பினார். சிவாஜி தந்திரமாக அவனைக் கொன்று விட்டார். பீஜப்பூர்ச் சுல்தான் சிவாஜியை வெல்ல முடியாது என்பதை அறிந்தார்; அதனால், சிவாஜியின் தகப்பனாரைத் தூதாக அனுப்பிச் சமாதானம் செய்துகொண்டார். சிவாஜி வடக்கே **கல்யாணி** முதல் தெற்கே **போண்டா** வரையிலுள்ள நாட்டிற்குத் தலைவரானார்.

5. அக்காலத்தில் **ஔரங்கஜீபு** என்ற பேரரசர், டில்லியில் ஆண்டுவந்தார். சிவாஜி அவரைப் பார்க்கச் சென்றார். ஔரங்கஜீபு சிவாஜியையும் அவர் மகனையும் தந்திரமாகச் சிறையிலடைத்துவிட்டார். சிவாஜி சிறைச்சாலையிலிருந்து தப்பிச் செல்ல ஒரு சூழ்ச்சி

செய்தார் : அவர், தாம் நோயினால் வருந்துவதாகப் பாசாங்கு செய்து, நோய் நீங்குவதற்குக் கடவுளுக்குப் பூசை செய்யவேண்டுமென்றும், அதற்குப் பழங்கள் வாங்கவேண்டுமென்றும் அரசனுக்கு அறிவித்தார். அரசர் பழங்கள் வாங்க அனுமதியளித்தார். சிவாஜி பழக்கூடைகளைத் தருவித்தார். அக்கூடைகளில் அவரும் அவருடைய மகனும் ஒளிந்துகொண்டு வெளிவந்து, அங்கே தயாராய் இருந்த குதிரைகளின் மீது ஏறி மாறு வேடத்துடன் ஓடிவிட்டனர்.

6. சிறைச்சாலையினின்றும் தப்பித் தம்மூர் சேர்ந்த சிவாஜி, அரசராக முடிசூட்டிக்கொண்டார். அவர் **சத்திரபதி** என்ற பட்டம் பூண்டார் ; மகாராஷ்டிரர்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தினார் ; தாம் வென்ற நாட்டைச் சிறப்பாக ஆண்டுவந்தார் ; சிறந்த அரசியல் முறைகளையும் சட்டங்களையும் ஏற்படுத்தினார்.

7. சிவாஜி அன்பும் இரக்கமும் உள்ளவர். ஆதலால், பகைவர்களையும் மரியாதையாய் நடத்திவந்தார். அவர் சிறந்த போர் வீரர் ; போரில் சிறையாகப் பிடிக்கப்பட்ட பெண்களையும் குழந்தைகளையும் அன்புடன் பாதுகாத்து வந்தார் ; பெண்களைத் தம் தாயாகவும், சகோதரிகளாகவும் கருதினார் ; பிற மதத்தைச் சேர்ந்தவர்களையும் வேலையில் அமர்த்திக்கொண்டார். அவர் இந்துமதப் பற்றுடையவர் ; ஆனால், பிற மதங்களைப் பழிக்கமாட்டார். அவர் தமது ஐம்பத்து மூன்றாவது வயதில் இறந்தார். அவரது உருவச்சிலை **பூனா**வில் உள்ளது.

சொற்கள் :

மராத்தி	மகாராஷ்டிரம்	சுல்தான்
படை	பாரதம்	நல்வழி
இராமாயணம்	கைப்பற்றினர்	சவாரி
மலை வாசிகள்	தூதாக	அடக்க
தந்திரமாக	சூழ்ச்சி	பேரரசர்
சிறையில்	சத்திரபதி	அரசியல்
மாறு வேடம்	உருவச்சிலை	பூனா

கேள்விகள்

1. 'மகாராஷ்டிரம்' என்பது எது ?
2. சிவாஜியின் பெற்றோர் யாவர் ?
3. சிவாஜியின் தாய் அவரை எவ்வாறு நல்வழியிற் பழக்கினாள் ?
4. சிவாஜி உயர்வு பெறக் காரணம் என்ன ?
5. சிவாஜி நாட்டுக்குத் தலைவரானது எப்படி ?
6. சிறையிலிருந்து தப்புவதற்குச் சிவாஜி செய்த சூழ்ச்சி என்ன ?
7. சிவாஜியின் குணங்கள் யாவை ?

பயிற்சி :

1. எதிர்ச்சொல் எழுது :
   பேரரசர், ஒற்றுமை, பழித்து, இறப்பு.
2. இரு பொருள் கூறு :—தப்பு, முடி, சட்டம், பற்று.

இலக்கணம் :

தன்வினை, பிறவினை :

அவன் உண்கிறான்.
அவள் ஊட்டுகிறாள்.

உண்கிருன்—என்னும் வினைச்சொல் ஒருவன் தானே செய்கிற தொழிலைத் தெரிவிக்கிறது. ஆதலின், அது தன் **வினை** எனப்படும்.

ஊட்டினுன்—என்னும் வினைச்சொல், தான் உண்ணு-மல், பிறரை உண்ணச் செய்யும் தொழிலைக் காட்டுகிறது. ஆதலால், அது **பிறவினை** எனப்படும்.

செய்தான், படிப்பித்தான், கற்பித்தான், கற்ருன், செய்வித்தான், படித்தான்—இவற்றில் தன்வினை பிறவினைகளைக் குறிப்பிடு.

சொல்:

எழுத்துக்கள் சேர்ந்து பொருளைத் தருவது சொல்-லாகும். அது பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்-சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

(1) குயவன் —பொருளின் பெயர்
இந்தியா—இடத்தின் பெயர்
ஆண்டு —காலத்தின் பெயர்
கால் —உறுப்பின் பெயர்
அன்பு —குணத்தின் பெயர்
உறங்கல்—தொழிலின் பெயர்

ஒன்றின் பெயரைத் தெரிவிக்கும் சொல் பெயர்ச்-சொல். அது பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணம் அல்லது பண்புப் பெயர் என ஆறு வகைப்படும்.

கீழ் வரும் பெயர்கள் இன்ன இன்ன பெயரென எழுது :—

சிவாஜி, பீஜபூர், வாரம், விரல், மலை.

8. பண்டித ஜவஹர்லால் நேரு

1. சுதந்தர இந்தியாவின் முதல் அமைச்சர் ஜவஹர்லால் நேரு என்பவர். இவர் தந்தையார் பண்டித மோதிலால் நேரு என்பவர்; தாயார் சொரூப ராணி அம்மையார். மோதிலால் அலகா-பாதில் வக்கீல் தொழில் புரிந்தார்; மிகுந்த செல்வம் தேடினர்.

2. ஜவஹர்லால் நேரு அலகாபாதிலுள்ள மீர்கஞ்சு என்னுமிடத்தில் 1889-ஆம் ஆண்டு பிறந்-தார். இவர் இளமையில் தம் வீட்டிலேயே ஆங்கிலக் கல்வி பயின்ருர். இவர் ஆசிரியர் அயர்லாந்து தேசத்து அறிஞரான 'புரூக்ஸ்' என்பவர். நேரு தம் பதினைந்தாம் வயதில் இங்கிலாந்துக்குச் சென்று,

உயர்தரக் கல்வி கற்ருர்; அங்குச் சட்டக் கல்வியும் பயின்று, இந்தியா திரும்பி, தம் தந்தையாரின்கீழ் வக்கீல் தொழில் நடத்தி வந்தார்.

3. இவர் 1916-ஆம் ஆண்டில் டில்லியில் வாழ்ந்து வந்த பெருஞ்செல்வர் ஒருவரின், மகளான **கமலா** என்னும் அம்மையாரை மணந்தார். இவ்வம்மையார் கணவரிடம் மிக்க அன்பு வாய்ந்தவர்; தம் கணவரைப் போலவே, தம் நாட்டின்மீது மிக்க அன்பு கொண்டவர்; நாட்டுச் சேவையில் தம் கணவருடன் சேர்ந்து உழைத்து வந்தவர்.

4. ஜவஹர்லால் நேரு காங்கிரஸ் சபையில் சேர்ந்து தொண்டு செய்தார். அலகாபாது நகர சபைத்தலைவரானபோது அந்நகர மக்களின் நலனைக் கருதி உழைத்தார்; ஆரம்பப் பள்ளிகளில் நூல் நூற்றலைக் கற்பிக்கச் செய்தார்; பல வழிகளிலும் மக்களுக்கு நன்மை செய்து, அவர்களால் புகழப்பட்டார்.

5. ஆங்கில அரசாங்கத்தார், 1928-ஆம் ஆண்டு '**சைமன் கமிஷன்**' என்ற கூட்டத்தினரை இந்தியாவுக்கு அனுப்பினர். அக்கூட்டத்தின் தலைவர் **சர் ஜான் சைமன்** என்பவர். இந்தியாவுக்கு எவ்விதமான சுதந்தரம் வழங்கலாம் என்பதை ஆராய அக்கூட்டத்தார் வந்தனர். காங்கிரஸ் சபை அவர்களைப் புறக்கணிக்கத் தீர்மானித்தது. அதனுல், மக்களை அடக்க அரசாங்கத்தார் படை வீரரை ஏவினர். ஜவஹர்லால் தொண்டர் படையை நடத்திச் சென்றனர். அவரையும் படை வீரர் அடித்தனர்.

6. ஜவஹர்லால் 1929-ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைவரானுர். அவ்வருடத்தில் உப்புச் சட்டத்தை மீற மகாத்துமா காந்தி உத்தரவிட்டார். ஜவஹர்லால் நேருவும், அவர் குடும்பத்தினரும் சட்டத்தை மீறினர்.

அரசாங்கத்தார் அவர்களைச் சிறையிலடைத்தனர். சிறையிலிருந்து வெளியே வந்த பின், ஜவஹர்லால் வரி கொடா இயக்கத்தில் சேர்ந்ததற்காக, மீண்டும் சிறைவாசம் செய்ய வேண்டியவரானார். இவர் மனைவியார் கமலா நேருவும் சிறை புகுந்தார்.

7. வடவிந்தியாவிலுள்ள பீஹாரில் பூகம்பம் ஏற்பட்டது. அப்போது ஜவஹர்லால் வேலையாட்களோடு சேர்ந்து, மண் சுமந்தார். இதைக் கண்ட தொண்டர் இவரைப் பின்பற்றித் தாமும் வேலை செய்தனர். பின்பு, அரசாங்கத்தார் இவர் அரசாங்கத்துக்கு விரோதமாகப் பேசினார் என்று குற்றஞ்சாட்டிச் சிறைத் தண்டனை விதித்தனர். அச்சமயம் இவர் மனைவியார் ஐரோப்பாவில் நோயுற்றிருந்தனர். அவரைப் பார்க்கும்படி இவரை விடுதலை செய்தனர். இவர் தம் மனைவியாரைக் காணச் சென்றார். அம்மையார் இறந்துவிட்டனர். இந்தியாவுக்குத் திரும்பிய இவர் மீண்டும் தேச சேவையில் ஈடுபட்டார்.

8. ஆங்கிலேயரை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று காங்கிரஸ் சபை 1942-ஆம் ஆண்டு தீர்மானித்தது. அதனால், ஜவஹர்லாலும் மற்றத் தலைவர்களும் சிறை செல்ல நேர்ந்தது. 1945-ஆம் ஆண்டு ஜவஹர்லால் சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்றார். 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், நமது நாடு சுதந்தரம் பெற்றது. ஜவஹர்லால் முதல் அமைச்சரானார்.

9. இவர் தேசப் பற்று மிகுந்தவர்; நாட்டிற்காகப் பதினேழு வருடங்கள் சிறையிலிருந்தவர். வீரம் உடையவர்; அரசியல் அறிவு படைத்தவர்; உண்மையுடன் உழைப்பவர். இவரது தலைமையில் இந்திய மக்கள் பல நன்மைகளைப் பெற்றுள்ளார்கள்.

ஒப்பற்ற இத்தலைவரின் அறிவுரைப்படி மக்கள் நடந்து வர வேண்டும்.

சொற்கள் :

சுதந்தரம்	முதல் அமைச்சர்	அறிஞர்
சட்டக் கல்வி	கணவர்	சேவை
நலன்	புறக்கணிக்க	பூகம்பம்
விடுதலை	மீண்டும்	வெளியேற்று

கேள்விகள் :

1. ஜவஹர்லால் நேருவின் பெற்றோர் யாவர் ?
2. நேரு எங்குக் கல்வி கற்றார் ?
3. இவர் படை வீரரால் ஏன் அடிக்கப்பட்டார் ?
4. இந்திய நாடு சுதந்தரமடைந்த நாள் எது ?
5. ஜவஹர்லால் எப்படிப்பட்ட குணம் வாய்ந்தவர் ?

பயிற்சி :

1. ஜவஹர்லால் செய்த தொண்டைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுது.

2. சேவை, மீற, இயக்கம்,—இச்சொற்களை வாக்கியங்களில் அமைத்தெழுது.

3. கற்பிக்க, அடக்க, இயக்கு, வெளியேறு—இவை என்ன வினைகள் ?

4. கல், அடங்கு, இயங்கு, வெளியேற்று—இவை என்ன வினைகள் ?

இலக்கணம் :

திணை, பால் :

உயர்ந்த அறிவு உள்ள பகுத்தறிவு உள்ள உயிர்கள்	உயர்ந்த அறிவு இல்லாத பகுத்தறிவு இல்லாத உயிர்கள்
மனிதன்—	விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, உயிரில்லாதன.
உயர்ந்த பிரிவு— உயர்திணை	உயர்ந்தது அல்லாத பிரிவு அல்திணை—அஃறிணை

உயர்திணை :

ஆண் பால் —	அவன்,	இராமன்.
பெண் பால் —	அவள்,	சீதை.
பலர் பால் —	அவர்,	ஆண்கள்.
	அவர்கள்,	பெண்கள்.

அஃறிணை :

ஒன்றன் பால் —	அது, பசு, காளை.
பலவின் பால் —	அவை, பசுக்கள்.
	அவைகள், காளைகள்.

'பால்' என்பது பகுப்பு அல்லது பிரிவு. அஃறிணையில் ஆண், பெண் என்ற பிரிவு இருப்பினும், அதைச் சிறப்பாகக் கொள்ளாததனுல், ஒன்று, பல என்ற இரு பிரிவுகள் ஏற்பட்டுள்ளன.

கீழ் வரும் சொற்கள் இன்னதிணை, இன்ன பால் என்பதை எழுது :—

அண்ணன், சகோதரி, தச்சன், ஆடு, மயில், மாணவர், குறவர், இவன், பானை.

9. கடிதங்கள்

நான்காம் புத்தகத்தில் கடிதம் எழுதும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள் கூறப்பட்டன. அவற்றை மனத்தில் வைத்துக்கொண்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ள கடிதங்களை மௌனமாக வாசித்து, இவை போன்ற பிற கடிதங்கள் எழுதப் பழகுதல் வேண்டும். முன்னர்த் தந்தையாருக்குத் தன் கல்வியைப் பற்றி மகன் எழுதிய மாதிரிக் கடிதமும் ஆசிரியருக்கு மாணவன் எழுதிய ஓய்வு விண்ணப்பக் கடிதமும் காட்டப்பட்டன.

1. வியாபாரக் கடிதம்

21, சாத்தப்பாடித்தெரு,
சிதம்பரம்,
2—8—52.

எஸ். எம். ஜெகந்நாதம் அண்டு கம்பெனிக்கு,
கொட்டாரத் தெரு,
நாகர்கோவில்.

ஐயன்மீர்,

தயவுசெய்து அடியிற் குறிப்பிடும் புத்தகங்களைத் தபால் மூலம் வி. பி.யில் எனது முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறேன்.

செல்வன் செந்தமிழ் இலக்கியம்

ஆசிரியர் : பண்டாரநம்பி அவர்கள்.
நான்காம் படிவத்துக்குரியது—6 பிரதிகள்.
ஐந்தாம் படிவத்துக்குரியது—8 பிரதிகள்.

உங்கள் உண்மையுள்ள,
ப. மாணிக்கவாசகன்.

2. அழைப்புக் கடிதம்

33, புலவரகம்,
பாளையங்கோட்டை,
4—8—52.

திருவாளர் மாணிக்கவாசகனுர் அவர்களுக்கு,
ஐயன்மீர்,

என் சகோதரன் பள்ளி இறுதி வகுப்புத் தேர்தலில் முதல்வனுய்த் தேறியதை முன்னிட்டு, நாளை என் இல்லத்தில் பாராட்டுத் தேநீர் விருந்து அளிக்கப்படும். அச்சமயம் நீவிர் உம் குடும்பத்தினருடன் வந்து சிறப்பிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வணக்கம்!

உம் அன்பன்,
மே. வானமாமலை.

3. தந்தை மகனுக்கு எழுதும் கடிதம்

24, புவியப்பர் தெரு,
அழகனேரி,
5—9—52.

அன்பு மிக்க அனவரத,

ஆசீர்வாதம்! இங்கு நானும் உன் தாயாரும் நலம். நீயும் உடல் நலத்துடன் இருப்பாய் என எண்ணுகிறேன்.

உன் கடிதம் கிடைத்தது. நீ தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருப்பதையறிந்து, நானும் உன் தாயாரும் மகிழ்கின்றோம்! கல்வியில் ஊக்கம் வேண்டும். கணக்குப் பாடத்தை மிகுந்த கவனத்துடன் படி. வருந்திஞல் வாராதது ஒன்றுமில்லை.

ஆயினும், நீண்ட நேரம் படிக்கவேண்டா. நீ எழுதியது போலத் தேகப்பயிற்சியும் செய்து வா.

புத்தகங்கள் வாங்க இன்று பத்து ரூபாய் மணியார்டர் மூலம் அனுப்புகிறேன். அடிக்கடி கடிதம் எழுது.

உன் அன்பு மிக்க தந்தை,
கா. சபாபதி

முகவரி :

செல்வன் ச. அனவரதம்,
நான்காம் படிவம், ஏ. பிரிவு,
முனிசிபல் உயர்நிலைப்பள்ளி,
திண்டுக்கல்.

சொற்கள் :

தயவு	படிவம்	இறுதி
தேர்வு	தேநீர்	ஆசீர்வாதம்
மதிப்பெண்	ஊக்கம்	வாராதது

கேள்விகள் :

1. கடிதத்தில் காணப்படும் உட்பிரிவுகள் எவை?

2. வியாபாரக் கடிதத்திற்கும் உறவினர்க்கு எழுதும் கடிதத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன ?

பயிற்சி :

1. பள்ளித் தோழருடன் செய்த உல்லாசப் பிரயாணத்தைப் பற்றி உன் தந்தையாருக்கு ஒரு கடிதம் எழுது.

2. இரண்டு நாள் ஒய்வு கேட்டு உன் வகுப்பாசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.

இலக்கணம் :

எண் :

ஊர் — ஊர்கள்

ஊர் - ஒன்றைக் குறிக்கின்றது—ஒருமை எண்.

ஊர்கள் - ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிக்கின்றது—பன்மை எண்.

எண் ஒருமை, பன்மை என இரண்டாகும்.

ஏடு, நூல், விலங்குகள், மக்கள், வேடர், ஈக்கள்—இவை இன்ன எண் என்பதை எழுது.

'ஆர்' என்பது சில சமயங்களில் ஒருமைப் பெயர்களுடன் சேர்ந்து மரியாதைப் பன்மையாகும் :

ஒருமை—மரியாதைப் பன்மை

தாய் —தாயார்
தந்தை —தந்தையார்
கோன் —கோனர்
இராணி—இராணியார்
ஔவை — ஔவையார்

கீழ் வருவனவற்றை மரியாதைப் பன்மையாக்கு :—
ஒருவன், செட்டி, மாமன், பாட்டி.

10. நீதிபதியின் சாதுரியம்

1. முன்னொரு காலத்தில் மகம்மதிய மன்னர் ஒருவர் அரேபியத் தேசத்தை ஆண்டு வந்தார். அவர் திறமை வாய்ந்த அரசர். குடிகள் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்பது அவர் விருப்பம். அவர் குடிகளுக்கு நீதி வழங்கப் பல நீதிபதிகளை நியமித்தார். நீதிபதிகள் புத்திக் கூர்மையும் நேர்மையும் வாய்ந்தவர்கள். மன்னர் அடிக்கடி மாறு வேடத்தில் சென்று அவர்கள் நீதி வழங்குவதைக் கவனித்து வந்தார்.

2. ஒருநாள் அவர் மாறுவேடம் பூண்டு, தமது குதிரையின்மேலேறி, கோட்டை வாயிலை அடைந்தார். அங்கே ஒரு முடவன் உட்கார்ந்திருந்தான். அவன் தன்னைக் கடைவீதி வரையிலும் குதிரையின்மீது ஏற்றிச் செல்லும்படி மன்னரை வேண்டினான். அவர் அவனைத் தம் குதிரையின்மீது ஏற்றிக்கொண்டு கடைவீதிக்கு வந்து, அவனை அங்கு இறங்கச் சொன்னார். அவன், "இது என் குதிரை; முடவனென்று என்னை நீ ஏமாற்றப் பார்க்கிறாயா?" என்றான். அரசர் அவனது மோசக் கருத்தை அறிந்தார்; குதிரையை நீதி மன்றத்துக்கு ஓட்டினார். இருவரும் நீதிபதி முன் சென்றனர்.

3. அப்போது நீதி மன்றத்தில் இரு வழக்குகள் கொண்டுவரப்பட்டன. ஓர் அடிமைப் பெண்ணை ஒரு புலவரும், ஓர் உழவனும் தத்தம் அடிமை என்று வழக்கிட்டனர். அந்தப் பெண் வாய் திறவாமலிருந்தாள். நீதிபதி அப்பெண்ணை நிறுத்திக்கொண்டு,

இருவரையும் மறுநாள் வரும்படி கட்டளையிட்டார். இரண்டாம் வழக்கில் ஒரு எண்ணெய் வியாபாரியும் ஓர் இரும்பு வியாபாரியும் ஒரு பையிலுள்ள நாணயங்களை 'என் பணம்; என் பணம்,' என்று வாதாடினர். நீதிபதி பையை வாங்கி வைத்துக்கொண்டு, அவ்விருவரையும் மறுநாள் வரும்படி உத்தரவிட்டார்.

4. பின்பு, மன்னர் தம் வழக்கைக் கூறினர். முடவனும், "ஐயா, நான் காலில்லாத முடவன்; அதனால், இந்தக் குதிரையை வாங்கினேன். இவர் என்னை மோசஞ் செய்ய நினைக்கிறார்," என்று தயங்காமற் கூறினன். நீதிபதி அக்குதிரையைத் தம்மிடம் நிறுத்திக்கொண்டு, இருவரையும் மறு நாள் வரும்படி கூறினர்.

5. மறுநாள் குறித்த நேரத்தில் அரசரும் முடவனும் நீதிமன்றத்தை அடைந்தனர். நீதிபதி புலவரை அழைத்து, அடிமைப்பெண் அவருக்கே உரியவள் என்று சொல்லி, அடிமைப் பெண்ணை அவருடன் செல்லக் கட்டளையிட்டார்; இரும்பு வியாபாரிக்கே நாணயங்கள் சொந்தம் என்று தீர்ப்பளித்தார்; பின்பு, அரசரையும் முடவனையும் அழைத்துக்கொண்டு, பல குதிரைகள் வரிசையாய் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை அடைந்தார்; முடவனை அவனது குதிரையைக் காட்டும்படி ஏவினர். அவன் அரசரது குதிரையைக் காட்டினன். ஆயினும், நீதிபதி அரசருக்கே அக்குதிரை உரியது என்று தீர்ப்புக் கூறினர். அரசர் வியப்படைந்தார்.

6. அரசர் நீதிபதியிடம் தாம் யாரென்பதைத் தெரிவித்தார். அந்த மூன்று வழக்குகளின் உண்மையை அறிந்த விதத்தைத் தமக்குத் தெரிவிக்கவேண்டும் என்று அவர் நீதிபதியைக் கேட்டார்-

நீதிபதி, "அரசரே இன்று காலையில் அடிமைப்பெண்ணை என் மைப்புட்டியில் சிறிது மையூற்றும்படி கட்டளையிட்டேன். அவள் ஒரு துளியும் கீழே விழாமல் மையை ஊற்றினாள். பல நாட்பழக்கமின்றி இவ்வாறு செய்யமுடியாதன்றோ? இதிலிருந்து அவள் புலவரின் அடிமைப் பெண்ணே என்பதை அறிந்துகொண்டேன். பையிலுள்ள நாணயங்களைத் தண்ணீரில் போட்டேன். அதில் ஒரு சிறிதும் எண்ணெய்ப் பசை யில்லை. அதனால், அப்பணம் இரும்பு வியாபாரியினுடையதே என்பதை அறிந்தேன். முடவன் குதிரையின் அருகில் சென்றபோது அது கனைக்கவில்லை. ஆனால், நீங்கள் சென்றபோது கனைத்தது. அதனால், குதிரை உங்களுடையதே எனத் தீர்மானித்தேன்," என்றார்.

6. அரசர் நீதிபதியின் நுண்ணிய அறிவைப் புகழ்ந்து, அவரைத் தலைமை நீதிபதியாக்கினார்.

சொற்கள் :

மகம்மதியர்	நீதி வழங்க	கோட்டை
முடவன்	வேண்டிக்கொள்	கடைவீதி
மோசக்கருத்து	நீதி மன்றம்	அடிமை
நாணயம்	வாதாடினர்	தயங்காமல்
மைப்புட்டி	தலைமை	கனைத்தது

கேள்விகள் :

1. அரசர் எங்கே சென்றார்?
2. அவர் நீதிபதியிடம் கூறிய வழக்கு யாது?
3. நீதிபதியிடம் வந்த மற்ற வழக்குகள் யாவை?

4. நீதிபதி அளித்த தீர்ப்புக்கள் யாவை ?

5. நீதிபதி வழக்குகளின் உண்மையை எவ்வாறு அறிந்தார் ?

பயிற்சி :

1. வழக்கிட்டனர், வாதாடினர், தயங்காமல்—இச் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.

2. நாணயம், மை—இவற்றிற்கு இரு பொருள் எழுது.

3. மேற்கோட்குறி, அரைப்புள்ளி, வந்துள்ள வாக்கியங்கள் இரண்டை எழுது.

4. பிரித்தெழுது :—

மையூற்றினுள், பழக்கமின்றி, அவ்விடம், அக்குதிரை.

5. ஓட்டினர், காட்டினன்—இவற்றைத் தன்வினைகளாக மாற்று.

இலக்கணம் :

இடம் :

பேசுகின்றவன் தன்னைக் குறிக்க வழங்கும் சொல்—நான், யான்—தன்மையிடம்.

பேசுகின்றவன் தன் முன்னல் நின்று கேட்பவனைக் குறிக்க வரும் சொல்—நீ—முன்னிலையிடம்.

பேசுகின்றவன், கேட்கின்றவன் அல்லாத ஒன்றைக் குறிக்க வழங்கும் சொல்—அவன், அவள், அது—படர்க்கையிடம்.

இடம், தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

	ஒருமை	பன்மை
தன்மையிடம் :	நான், யான்	நாம், யாம், நாங்கள், யாங்கள்.
முன்னிலையிடம் :	நீ	நீர், நீவிர், நீங்கள்.
படர்க்கையிடம் :	அவன் அவள் அது	அவை, அவர்கள்.

படர்க்கையிடத்துக்கே திணை, பால் கூறவேண்டும். தன்மை, முன்னிலையிடங்களுக்கு ஒருமை, பன்மை மாத்திரம் கூறவேண்டும்.

கீழே கொடுக்கப்பட்ட சொற்களுக்குக் கட்டங்களில் காட்டியபடி திணை, பால், எண், இடம் கூறு :—

புலி, பள்ளிக்கூடம், மாணவன், மாணவி, நீ, ஜனங்கள், மைத்துனன், நான், அவன், பசுக்கள், நீங்கள்.

சொல்	திணை	பால்	எண்	இடம்
புலி	அஃறிணை	ஒன்றன் பால்	ஒருமை	படர்க்கை

11. சோம்பேறிச் சுப்பன்

நல்லூரில் சுப்பன் என்ற ஒரு சிறுவன் இருந்-தான். அவன் சோம்பேறி. அவன் பள்ளிக்கூடம் செல்ல விரும்பவில்லை; துஷ்டரோடு சேர்ந்து விளை-யாடினான். தன் பெற்றோரிடம் பள்ளிக்கூடத்துக்குப் போனதாகப் பொய் சொல்வது அவன் வழக்கம். ஒரு நாள் அவனுடன் விளையாடுவதற்கு ஒருவரும் வரவில்லை. அவன் ஓர் எறும்பைக் கண்டான். அவன் அதனுடன் விளையாட விரும்பினான்.

சுப்பன் : எறும்பே, இன்று சூரியன் நன்றாய்ப் பிரகாசிக்கிறது; காற்றும் வீசிக்கொண்டிருக்கிறது; இது விளையாடுவதற்கு ஏற்ற நேரமாயிருக்கிறது! நீ என்னுடன் விளையாட வருகின்றாயா?

எறும்பு : நான் தானியம் சேகரிக்கப் போகின்-றேன். நான் உன்னுடன் இப்பொழுது விளையாடி, இவ்வெயிற்காலத்தை வீணாகக் கழித்துவிட்டால், மழை பெய்யும் காலத்தில் எனக்கு ஆகாரம் எப்படிக்-

கிடைக்கும்? நான் பட்டினி கிடக்க வேண்டுவது-தான். ஆதலால் நான் உன்னுடன் விளையாட வர முடியாது.

அவ்வழியே புரு ஒன்று பறந்து வந்தது.

சுப்பன்: புருவே, புருவே, என்னுடன் சிறிது நேரம் நீ விளையாடமாட்டாயா?

புரு: நான் கூடு கட்டுவதற்காக இலைகளும் குச்சிகளும் சேகரிக்கச் செல்கிறேன். உன்னுடன் விளையாடினால், நான் எப்படிக் கூடு கட்ட முடியும்?

சுப்பன் சிறிது தூரம் சென்றான். அங்கு ஒரு பசு மேய்ந்துகொண்டிருந்தது.

சுப்பன்: பசுவே, நீ என்னுடன் விளையாட வரமாட்டாயா?

பசு: சிறுவனே, நான் புல் மேய வேண்டும். புல் மேய்ந்து, என் வயிறு நிறைந்தால்தான் நான் என் எஜமானனுக்குப் பால் கொடுக்க முடியும். ஆதலால் நான் உன்னுடன் விளையாடி, நேரத்தை வீணாகக் கழிக்கமாட்டேன்.



சுப்பன் அங்கு ஒரு தேனீயைக் கண்டான். அதனிடம் சென்று, தேனீயே, ஒருவரும் என்னுடன் விளையாட வரவில்லை. நீயாவது என்னுடன் விளையாடுகிருயா?

தேனீ: அப்பா, நீ வீணுக உன் நேரத்தைக் கழிக்கிருயே! நான் பூத்தோறும் சென்று, தேன்

சேகரிக்கவேண்டும். உன்னுடன் விளையாட எனக்கு நேரமில்லை. என்னைத் தொந்தரவு செய்யாதே!

சுப்பன் ஏமாற்றம் அடைந்தான். அவன், "இந்த அற்ப உயிர்களும் காலத்தை வீணாகக் கழிக்கவிரும்ப-வில்லையே! நான் காலத்தை வீணாகக் கழிக்கின்-றேனே? நானும் என் கடமையை இன்று முதல் ஒழுங்காகச் செய்வேன்," என்று எண்ணி, உடனே பள்ளிக்கூடம் சென்றான்; பாடங்களை நன்றாகப் படித்தான். எல்லாரும் அவனைச் சுறுசுறுப்புள்ள **சுப்பன்** என்று புகழ்ந்தனர்.

'சோம்பித் திரியேல்'

சொற்கள் :

சுப்பன்	ஒழுங்காய்	சுறுசுறுப்பு
அறுவடை	சோம்பேறி	எறும்பு
கழிகள்	பட்டினி	புறா
தொந்தரவு	அற்ப உயிர்கள்	கடமை

கேள்விகள் :

1. எறும்பு சுப்பனுக்கு என்ன கூறினது?
2. புறா ஏன் விளையாட விரும்பவில்லை?
3. பசு என்ன சொல்லியது?
4. தேனீயின் வேலை என்ன?

பயிற்சி :

1. 'சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.'—இதனை விளக்க ஒரு கதை எழுது.

2. பரந்து, பறந்து / விலை, விளை } இச்சொற்களின் பொருள் வேறுபாட்டை விளக்கி எழுது.

இலக்கணம் :

வேற்றுமை

தச்சன், மாடு—அவை பொருளின் பெயர்.

தச்சன் பெட்டியைச் செய்தான்.

மாடு புல்லை மேய்ந்தது.

இவ்வாக்கியங்களில், இராமன் என்ற பெயர்ச்சொல் பெட்டியைச் செய்யும் கர்த்தாவாகின்றது. அது போல, மாடு என்ற பெயர்ச்சொல் புல்லை மேயும் கர்த்தாவாகின்றது. இவ்வாறு, பெயர்ச்சொற்கள் பொருள் வேறுபடுவது வேற்றுமையாகும். இவ்வேற்றுமை எட்டு வகைப்படும். முதலாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் நீங்கலாக, மற்ற ஆறு வேற்றுமைகளுக்கும் வேற்றுமை உருபுகள் உண்டு. (உருபு - அடையாளம்)

வேற்றுமை ஏற்ற பெயர்	வேற்றுமை உருபு
1. இராமன் நேற்று இங்கு வந்தான்.— இது முதல் வேற்றுமை.	——
2. இராமனை நேற்று நான் கண்டேன்.— இஃது இரண்டாம் வேற்றுமை.	ஐ
3. இராமனால் விருந்து அளிக்கப்பட்டது.—	ஆல்
இராமனோடு நான் சென்றேன்.	— ஒடு
இராமனுடன் ,, ,,	— உடன்
இவை மூன்றும் வேற்றுமை.	
4. இராமனுக்குப் பரிசு வழங்கினேன். — இது நான்காம் வேற்றுமை.	கு

5. இராமனில் எனக்குச் சிறந்த நண்பன் இல்லை — இல்

இராமனிடத்திலிருந்து கடிதம் வந்தது. — இருந்து
இவை ஐந்தாம் வேற்றுமை.

6. இராமனது புத்தகம் கிழிந்துவிட்டது. — அது

இராமனுடைய குணங்கள் சிறந்தவை. — உடைய
இவை ஆறும் வேற்றுமை.

7. இராமனிடத்தில் நான் அன்புள்ளவன். — இடத்தில்
இது ஏழாம் வேற்றுமை.

8. இராமா, வா.

இஃது எட்டாம் வேற்றுமை.

முதலாம் வேற்றுமை எழுவாய் வேற்றுமை என்றும், எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை என்றும் வழங்கப்படும்.

விளிவேற்றுமைக்கு இப்பாடத்திலிருந்து உதாரணம் எழுது.

சுப்பன் என்ற பெயர்ச்சொல்லை எட்டு வேற்றுமைகளிலும் அமைத்து எழுது.

12. சாலே விதிகள்

1. பிள்ளேகளே, நீங்கள் வீட்டை விட்டு வெளியே வந்த பின் தெருக்களிற் செல்ல வேண்டும். நீங்கள் மற்றவர்க்கு இடையூறு செய்தல் கூடாது. கூட்டம் மிகுதியாயுள்ள இடங்களில் வேகமாய்ச் செல்லுதல் கூடாது. கிராமங்களிலுள்ள தெருக்களில் நடந்து செல்லும் போது, பாதுகாப்பு விதிகளேக் கவனிக்க வேண்டிய அவசியமேற்படுவதில்லே. நகரங்களின் வீதிகளில் செல்பவர் அவ்விதிகளேக் கவனித்து நடக்கவேண்டும்.

2. சென்னேயைப் போன்ற நகரங்களில் பல தொழிற்சாலேகளும் கல்லூரிகளும் கடை வீதிகளும் இருக்கின்றன; ஜன நெருக்கமும் அதிகம்; போக்கு வரவுக்குரிய சாதனங்களும் மிகுதியாய் உள்ளன; மோட்டார் வண்டிகள், மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள், துவிச்சக்கர வண்டிகள், டிராம் வண்டிகள் முதலியன போவதும் வருவதுமாயிருக்கும். இவற்றுக்கிடையே மக்கள் நடந்து செல்ல வேண்டும். அவர்கள் மிக்க கவனமாக இல்லாவிட்டால், ஆபத்துக்குள்ளாவார்கள். ஆகவே, சாலே விதிகளே நன்கு அறிந்துகொள்ள வேண்டும்.

3. நடந்து செல்கின்றவர்கள், சாலேயின் வலப்பக்கம் செல்ல வேண்டும். ஏனெனில், சாலேயில் செல்லும் வண்டிகள் இடப்பக்கமாகவே செல்லும். அவை அப்படிச் செல்ல வேண்டுமென்பது அரசாங்கத்தார் உத்தரவு. நடந்து செல்பவர் வலப்பக்கம் போனல், எதிரில் வரும் வண்டிகளேக் கவனித்து, வண்டிகள் தூரத்தில் வரும்போதே விலகிப் போகலாம்; இதனல், ஆபத்துக்குட்படாமல் தப்பலாம். தலே குனிந்து-

கொண்டும், புத்தகங்கள் கடிதங்கள் முதலியவற்றை வாசித்துக்கொண்டும் செல்லுதல்கூடாது. திடீரென்று சாலையின் குறுக்கே செல்லக் கூடாது. சாலையின் முன்னும் பின்னும் பார்த்துக்கொண்டே வண்டிகள் வாராத சமயம் பார்த்துச் செல்ல வேண்டும். சாலையின் குறுக்கே செல்லும் போது, பாதித் தூரம் வரையிலும் வலப்பக்கம் பார்த்துக்கொண்டு, பின்பு இடப்பக்கம் பார்த்துக்கொண்டும் செல்லவேண்டும். பிறரை இடித்துத் தள்ளிக்கொண்டு போதல் கூடாது.

4. மேற்சொன்ன முறைகள் பாதசாரிகள் கவனித்தற்குரியவை. அவற்றைக் கவனியாமல் சென்ருல், ஆபத்து ஏற்படும். பெரிய நகரங்களில் மக்கள் அடிக்கடி ஆபத்துக்குள்ளாகின்ருர்கள். சிலர், ஓடும் வண்டிகளிலிருந்து இறங்க முயன்று, கீழே விழுந்து காயமடைகின்றனர்; சிலர், உயிரிழக்கின்றனர். சிறுவர், பந்து விளையாடிக்கொண்டே எதிரில் வரும் வண்டிகளைக் கவனியாமல் செல்கின்றனர். சில சமயங்களில் பந்து அவர்கள் கையிலிருந்து தவறிச் சாலையில் உருண்டோடுகின்றது. சிறுவர் அதை எடுப்பதற்காக ஓடுகின்றனர். பின்னிருந்து வரும் வண்டி அவர்கள்மீது ஏறிவிடுகின்றது. ஐயோ! அவர்கள் உயிரிழக்கின்ருர்கள். இப்படிப்பட்ட ஆபத்துக்கள் நேராவண்ணம் சாலை விதிகளைக் கவனித்து நடக்க வேண்டும்.

சொற்கள் :

இடையூறு	பாதுகாப்பு	தொழிற்சாலை
கடை வீதி	போக்கு வரவு	துவிச்சக்கரம்
குனிந்து	குறுக்கே	இடித்து
பாதசாரி	உருண்டு	நேராத வண்ணம்

கேள்விகள் :

1. கிராமங்களிலுள்ள தெருக்களுக்கும் நகரங்களிலுள்ள தெருக்களுக்கும் வித்தியாசம் என்ன ?

2. நகர வீதிகளில் காணப்படுபவை யாவை ?

3. சாலையின் குறுக்கே செல்பவர், கவனித்தற்குரியது யாது ?

4. சிறுவர் ஆபத்துக்காளாகுங் காரணம் என்ன ?

பயிற்சி :

1. சாலை விதிகளை மௌனமாக வாசித்து, அவற்றை இலக்கமிட்டு எழுது.

2. நான்காம் பத்தியில் வந்துள்ள நிறுத்தக் குறிகளை எடுத்தெழுதி, அவற்றின் பெயரையும் குறிப்பிடு.

இலக்கணம் :

வினைச்சொல் :

வண்டி ஓடுகிறது. சிறுவர் விளையாடுகின்றனர். மழை பெய்கிறது.

ஓடுகிறது, விளையாடுகின்றனர், பெய்கிறது, என்னும் சொற்கள், வண்டி, சிறுவர், மழை என்ற பொருள்களின் செயலைக் குறிக்கின்றன. இவ்வாறு பொருளின் செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

வண்டி தரையில் ஓடும்.	வண்டி தண்ணீரில் ஓடாது.
கோபாலன் இங்கு வருவான்.	கோபாலன் இங்கு வாரான்.

ஓடும், வருவான் என்னும் வினைச்சொற்கள் தொழில் நிகழ்தலைக் குறிக்கின்றன—இவை உடன்பாட்டு வினைச்சொற்கள்.

ஓடாது, வாரான் என்னும் வினைச்சொற்கள் தொழில் நிகழாமையைத் தெரிவிக்கின்றன—இவை எதிர்மறை வினைச்சொற்கள்.

13. சிங்கமும் முயலும்

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதுண் டதனைச் சொல்வேன் :
செறியுமோர் காட்டி லேஓர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
ஆடியூன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி 1

" ஆணிளஞ் சிங்க மே!உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா ;
விதத்தினில் தினம்ஒன் றாக
ஊணுனக்(கு) அளிப்போம்," என்ன,
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்றா
அருந்தியங்(கு) இருக்கும் நாளில் 2

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்,
" இனிஅது விடாது நம்மை ;
எனினும்ஓர் எடுப்பெ டுத்து,
வினையைஇப் போது செய்து
வென்றுநாம் உய்ந்தோ மாகில்,
நனிவிலங் கனைத்தும் உய்யும் ;
நமக்கும்நற் புகழ்உண்(டு) " என்றே 3

கருதிஅச் சிங்கத் தின்றன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும், முயலை நோக்கி
மன்னன், " என் பசிவேளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை ; பிந்தி
வருவதென் ? உரைநீ," என்று
மனந்தனிற் சினந்து கூற, 4

" ஐய!உன் பசிவேளைக்கே
அடியனேன் வந்தேன் ; அங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன் ;
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யஉம் பக்கல் வந்தேன்
சுவாமி!"என்(று) இறைஞ்சி நிற்க 5

" சிங்கம்நாம் அல்லால் வேறோர்
சிங்கமும் கண்டா யாகில்
அங்கதைக் காட்ட வா,"என்று
அழைத்தலும், அழைத்துப் போய்ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர(வு) அதனைக் காட்ட,
அங்கதை எட்டிப் பார்க்க,
அதனிழல் உருவம் தோன்ற 6

தன் உரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து,
துன்னுபங் கத்த முந்தித்
துளங்கியே செத்த(து) ; அந்தோ !

‘ மன்னிய பகையா னாலும்
மதியினால் வெல்ல லாகும்,’
என்னுமோர் அரிய நீதி
இக்கதை விளக்கு மன்றே ? 7

—பஞ்சதந்திரப்பாடல்

சொற்கள் :

குறுமுயல்	துய்ய	மன்னிய
வீண்	புனல்	நனி
செறியும்	துளங்கு	வேழம்
வெறி	உய்ந்தோம்	வெய்ய
ஆணை	அடியனேன்	முழை
எடுப்பு	பையவே	பங்கம்
சினந்து	பக்கல்	சத்துரு
வெருவி	துரவு	அரிய

கேள்விகள் :

1. சிங்கம் காட்டில் செய்து வந்தது என்ன ?
2. அதைத் தடுக்க மிருகங்கள் என்ன செய்தன ?
3. குறுமுயல் தனக்குள் கூறிக்கொண்டது என்ன ?
4. அது சிங்கத்தினிடம் சொன்னது என்ன ?
5. சிங்கத்துக்கு முயல் எதனைக் காட்டியது ?
6. சிங்கம் எப்படி இறந்தது ?

பயிற்சி :

1. ஊன், ஊண் ; முளை, முழை—இச்சொற்களின் பொருள் வேறுபாட்டை விளக்க இவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுது.

2. கீழ்க்காணும் சொற்களின் பொருள் அமைந்த சொற்களைக் கொடுக்கப்பட்ட சொற்களிலிருந்து எடுத்தெழுது :—

நெருங்கிய, மிருகங்கள், உண்டு, முயற்சி, மிகுதியான, பிழைக்கும், யானை, கோபித்து, அஞ்சி, காடு, குகை, சேறு, நீர், கிணறு.

விலங்குகள்	=	அருந்தி	=
எடுப்பு	=	செறியும்	=
உய்யும்	=	வெருவி	=
அடவி	=	முழை	=
வேழம்	=	சினந்து	=
நனி	=	புனல்	=
துரவு	=	பங்கம்	=

3. இக்கதையினால் நீ அறியும் நீதியை எழுது.

இலக்கணம் :

காலம் :

இராமன் நேற்று வேலை செய்தான்—'செய்தான்' என்ற வினைச்சொல் முன்பு நடந்த காரியத்தைத் தெரிவிக்கிறது—இது இறந்தகாலம் காட்டும் வினைச்சொல்.

இராமன் இன்று வேலை செய்கிறான்—'செய்கிறான்' என்ற வினைச்சொல் இப்போது நடக்கின்ற காரியத்தைத் தெரிவிக்கிறது—இது நிகழ்காலம் காட்டும் வினைச்சொல்.

இராமன் நாளை வேலை செய்வான்—'செய்வான்' என்ற வினைச்சொல் இனிமேல் நடக்கும் காரியத்தைத் தெரிவிக்கிறது—இது எதிர்காலம் காட்டும் வினைச்சொல்.

வினைச்சொல் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களுள் ஒன்றைத் தெரிவித்து வரும்.

செய்தான் —செய்+த் +ஆன்		இவை, 'செய்' என்பதிலிருந்து பிறந்த வினைச்சொற்கள்.
செய்கிறான்—செய்+கிறு+ஆன்		
செய்வான் —செய்+வ் +ஆன்		

இவ்வினைச்சொற்களில், முதலில் நிற்பதும் (பகுதி) இறுதியில் நிற்பதும் (விகுதி) ஒன்று போலவே இருக்கின்றன. இரண்டிற்கும் இடையில் நிற்பன (இடைநிலைகள்) வேறுபடுகின்றன. இடைநிலைகள் வேறுபடுவதனால், காலமும் வேறுபடுகின்றது. ஆதலால், வினைச்சொற்களில் காலம் காட்டுவன இடைநிலைகள் என்பதை அறிய வேண்டும்.

இறந்தகால இடைநிலைகள் த், ட், ற், இன் என்பன.

அடித்தான் —த் இடைநிலை
உண்டான் —ட் ,,
தின்றான் —ற் ,,
ஓடினான் —இன் ,,

நிகழ்கால இடைநிலைகள் கிறு, கின்று என்பன.

பாடுகிறான் —கிறு இடைநிலை
பாடுகின்றான் —கின்று ,,

எதிர்கால இடைநிலைகள் ப், வ் என்பன.

ஓடுவான் —வ் இடைநிலை
உண்பான் —ப் ,,

பின்வரும் வினைச்சொற்களுக்குக் காலமும், பகுதியும், இடைநிலையும் எழுது :—

கற்றான், தங்கினான், கேட்கிறான், பிடிப்பான், படித்தான், ஆடுவான்.

சொல்	பகுதி	இடைநிலை	காலம்
கற்றான்	கல்	ற்	இறந்தகாலம்

14. ஜயசிங்கு

1. தென்ஞர்க்காட்டு மாவட்டத்தில் **சங்கராபரணி** என்னும் சிறிய ஆறு ஓடுகிறது. அதன் அருகில் இடிந்து பாழாய்க் கிடக்கும் கோட்டைகளும், மாளிகைகளும், கோபுரங்களும், அகழிகளும் காணப்படுகின்றன. முற்காலத்தில் **செஞ்சிக்கோட்டை** என்று வழங்கப்பட்ட இடம் இதுவே.

2. இக்கோட்டை 16-ஆம் நூற்ருண்டில் விஜயநகர மன்னர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பின்பு, மராட்டிய மன்னரான சிவாஜி இதைக் கைப்பற்றிஞர். அவர் இறந்த பின், ஔரங்கசீபு இதைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தார். அவருடைய படைத் தலைவர் ராஜபுத்திர அரசர்களை இதை ஆளும்படி நியமித்தார். அவர்களில் **தரணி சிங்கு** என்பவர் ஒருவர். அவர் மனைவியின் பெயர் **ரமாபாய்** என்பது. அவர்களுடைய புதல்வரே **ஜயசிங்கு** என்னும் புகழ் பெற்ற அரசர். ஜயசிங்கு என்னும் பெயர், தேஜ் சிங்கு அல்லது **தேசிங்கு** என்று வழங்குகிறது.

3. அக்காலத்தில் டில்லியில் **ஷாஆலம்** என்னும் முகலாய மன்னர் ஆண்டு வந்தார். அவரிடம் ஓர் உயர்ந்த குதிரை இருந்தது. பல அரசர் அதை அடக்கி அதன்மேல் ஏறிச் சவாரி செய்ய முயன்று, தோல்வியுற்றனர். ஷாஆலம் அவர்களைச் சிறையிலடைத்து விட்டார். அவர்களுள் தரணி சிங்கும் ஒருவர்.

4. ஜயசிங்கு பதிஞறு வயது இளங்காளையாய் விளங்கிஞர். அவர் ஆண்மையும், தோள் வலியும் மிகுந்தவர்; குதிரை ஏறிச் சவாரி செய்வதில் மிகத்

தேர்ந்தவர். அவர் தம் தந்தையாரின் நிலையை அறிந்தார்; தம் தாயிடம் விடை பெற்றுக்கொண்டு தம் தோழனை முகம்மதுகான் என்பவனுடன் டில்லிக்குச் சென்றார். அரசரிடம் தாம் குதிரையை அடக்கிச் சவாரி செய்வதாகத் தெரிவித்தார். அரசர் அது அவரால் முடியாத காரியம் எனச் சொல்லி அவரைத் தடுத்தார். அவர் பிடிவாதம் செய்ததால் அரசர் அவருக்குக் குதிரையைக் காட்டினார்.

5. ஜயசிங்கு குதிரையின் சமீபத்தில் சென்றார்; அது கனைத்தது. அவர் அஞ்சவில்லை; அதனைத் தட்டிக்கொடுத்துக்கொண்டே துள்ளிக் குதித்து அதன் மீது அமர்ந்தார். அவரைக் கீழே தள்ள அது முயன்றது; முடியவில்லை. அவர் அதை வேகமாகச் செலுத்தினார். அது களைப்படைந்தது. பின்பு, அவர் அரசர் முன் அதைக் கொண்டுவந்து நிறுத்தினார். அரசர் ஆச்சரியமடைந்து, அவருக்குப் பல பரிசுகளை வழங்கி, அக்குதிரையையும் அவருக்கே கொடுத்துவிட்டார். தரணி சிங்கும் மற்ற அரசரும் விடுதலை பெற்றனர். தந்தையார் தம் மைந்தரைத் தழுவி, அவர் வீரத்தை மெச்சினார். அரசரின் படைத்தலைவரான பீமசிங்கு, தம் மகளை ஜயசிங்குக்கு மணம் செய்வித்தார். மணமுடிந்தபின் யாவரும் செஞ்சிக்குத் திரும்பினர்.

6. சில ஆண்டுகள் கழிந்தன. தரணி சிங்கு இறந்தார். ஜயசிங்கு அரசரானார். அவரது ஆட்சியில் குடிகள் கவலையின்றிச் சுகமாய் வாழ்ந்து வந்தார்கள். முகம்மதுகான் படைத்தலைவனாயிருந்தான். ஆர்க்காட்டு நவாபு ஜயசிங்கினிடம் இறைப்பணத்தை வாங்கி வரும்படி தோன்றமல்லன் என்பவனை அனுப்பினார். ஜயசிங்கு கப்பம் கட்ட மறுத்துவிட்-

டார். நவாபு கோபங்கொண்டு செஞ்சியின்மீது படையெடுத்தார்.

7. அச்சமயம் முகம்மதுகான் தன் திருமணத்துக்காகச் செஞ்சியிலிருந்து இருபதுமைல் தொலேவிலுள்ள வழுதாவூருக்குச் சென்றிருந்தான். திருமணச் சடங்கு நடந்துகொண்டிருந்தபோது ஜயசிங்கு அனுப்பிய தூதன் அங்குச் சென்றுன். பகைவர் படையெடுப்பதையறிந்த முகம்மதுகான், உடனே தனது திருமணத்தை நிறுத்திவிட்டுச் செஞ்சிக்கு வந்தான்; படையுடன் சென்று, நவாபுவை எதிர்த்தான். நவாபுவின் படை வீரர் அஞ்சிப் புறமுதுகிட்டோடினர். அவன் வெற்றி பெற்றுத் திரும்பி வந்துகொண்டிருந்தான். அப்போது நவாபுவின் படைத்தலேவன் அவனே மறைவிலிருந்து தன் துப்பாக்கியால் சுட்டான். அவன் திரும்பிப் பார்த்தபோது, மற்ருெரு குண்டு அவன் நெற்றியிற் பாய்ந்தது. அவன் கீழே விழுந்து, உயிர் துறந்தான்.

8. தம் நண்பன் இறந்த செய்தியறிந்த ஜயசிங்கு வெகுண்டு தம் சேனேயுடன் பகைவரை எதிர்த்தார். நவாபுவின் சேனே தோல்வியுற்றது. ஆயினும், தம் நண்பனேப் பிரிந்து அவர் உயிர் வாழ விரும்பவில்லே; தம் வாளே ஆகாயத்தில் வீசியெறிந்து கீழே மல்லாந்து படுத்தார். அந்த வாள் அவர் மார்பில் பாய்ந்தது. அவர் இறந்தார். அவர் மனேவி, அவர் இறந்த செய்தி கேட்டுத் தீயிற்பாய்ந்து உயிர் விட்டாள். ஜயசிங்குக்குப் பிறகு செஞ்சியும் அழிந்தது.

சொற்கள் :

சங்கராபரணி	மல்லாந்து	கோபுரம்
நூற்றுண்டு	மாளிகை	மராட்டியர்
ஆதிக்கம்	முகலாயர்	இளங்காளை
ஆண்மை	தோள் வலி	களைப்பு
மணச்சடங்கு	படையெடுப்பு	மறைவு

கேள்விகள் :

1. ஜயசிங்குவின் தந்தையார் டில்லியில் சிறைப்படக் காரணம் என்ன ?
2. ஜயசிங்கு தம் தந்தையாரை எவ்வாறு சிறையிலிருந்து விடுவித்தார் ?
3. முகம்மதுகான் எப்படி இறந்தான் ?
4. ஜயசிங்கு எப்படி உயிர் துறந்தார் ?

பயிற்சி :

புகழ், விடை, தழுவி—இச்சொற்களை வாக்கியங்களில் அமைத்தெழுது.

இலக்கணம் :

பால் காட்டும் விகுதிகள் :

ஓடினன்	ஓடு + இன் + ஆன்	—ஆண் பால்
ஓடினள்	ஓடு + இன் + ஆள்	—பெண் பால்
ஓடினர்	ஓடு + இன் + அர்	—பலர் பால்
ஓடிற்று	ஓடு + இன் + று	—ஒன்றன்பால்
ஓடின	ஓடு + இன் + அ	—பலவின்பால்
ஓடினேன்	ஓடு + இன் + ஏன்	—தன்மை ஒருமை
ஓடினய்	ஓடு + இன் + ஆய்	—முன்னிலை ஒருமை

இவ்வினைச் சொற்களில், பகுதியும், இடைநிலையும் ஒன்றுபோலவே யிருக்கின்றன. விகுதிகள் வேறுபட்டிருக்கின்றன. விகுதிகள் வேறுபடுவதால், திணை, பால், எண், இடம், வேறுபடுகின்றன. ஆதலின், வினைமுற்றுக்களிலுள்ள விகுதிகள், திணை, பால், எண், இடம் காட்டும்.

பெயர்ச்சொற்கள் திணை, பால், எண், இடம் என்பவற்றுடன் வேற்றுமையையும் உணர்த்தி வரும்.

வினைமுற்றுச் சொற்கள் திணை, பால், எண், இடம் என்பவற்றுடன் காலத்தை உணர்த்தி வரும்.

பின் வரும் வாக்கியங்களில் உள்ள சொற்களுக்குச் சொல் இலக்கணம் எழுது :—

மாணவன் படிக்கிறான்.
பறவைகள் பறந்தன.
நீ நேற்று உழுதாய்.
நான் பாடினேன்.
புலி பாய்கிறது.
அவர்கள் கேட்டார்கள்.
அவள் வருவாள்.

15. மூளைக்கு வேலை

கீழே தரப்பட்டுள்ளவற்றைக்கொண்டு கேள்விகளுக்கு விடை எழுது :—

அச்சாணியினால், அச்சாணியற்று, பால் வற்றி, பறிப்பாரற்று, நகையினால்.

1. ஆலிலை பழுப்பதேன், இராவழி நடப்பதேன் ?

2. தேர் ஓடுவதேன், தெருத்திண்ணை மெழுகுவதேன் ?

3. எருக்கிலை பழுப்பதேன், எருமைக்கன்று சாவதேன் ?

4. விகடம் விகடம் ஆவதேன், வீட்டில் கள்ளர் புகுவதேன் ?

5. வயலின் வளம் குறைவதேன், வண்டி குடை சாய்வதேன் ?

பயிற்சி :

இம்முறையிலமைந்த கேள்விகளைக் கேட்டு மாணவர் விடை சொல்லப் பழகவேண்டும்.



16. அஞ்சலகம்

1. மக்கள் அருகில் இருப்பவர்களுடன் பேசித் தங்கள் கருத்தைத் தெரிவிக்கின்றார்கள்; அயலூரில் இருக்கும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் செய்தி தெரிவிக்கக் கடிதம் எழுதுகின்றார்கள். கடிதம் குறிப்பிட்டவரிடம் போய்ச் சேர்கின்றது. கடிதங்களைக் குறிப்பிட்டவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டிய வேலையைச் செய்து வருவது அஞ்சலகம். ஆகையால், மக்களுக்கு அஞ்சலகம் மிகவும் அவசியமானது. முற்காலத்தில் இவ்வித வசதி இல்லாததால், மக்கள் மிகுந்த துன்பத்தை அடைந்து வந்தார்கள்.

2. முற்காலத்தில் ஆட்கள் மூலமாகத்தான் செய்தியனுப்பி வந்தார்கள்; பொருளும் பணமும்

அனுப்ப வேண்டியவர்கள் கூலிக்கு ஆளையமர்த்தி, அவன் மூலம் அனுப்புவது வழக்கம். வழியில் கள்வர் பொருளைப் பறித்துக்கொள்வர்; வேறு பல இன்னல்களும் நேரிடும். சில தேசங்களில் குதிரை வீரர் மூலமாகச் செய்தியனுப்பும் முறையை ஏற்படுத்தியிருந்தனர். நமது நாட்டில் ஷேர் ஷா என்ற டில்லி அரசன், குதிரைகள்மீது ஆட்கள் சென்று கடிதம் கொடுக்கும் முறையை ஏற்படுத்தியிருந்தான். ஆங்கிலேயர் நமது நாட்டில் வந்து, அஞ்சல் முறையை ஏற்படுத்தினர்.

3. போக்கு வரவுச் சாதனங்கள் வளர்ச்சியுறவே, செய்தி அனுப்பும் முறையும் விரைவில் முன்னேற்றமடைந்தது. புகைவண்டித் தொடர்கள், நீராவிக் கப்பல்கள், ஆகாய விமானங்கள் முதலியன கடிதங்களைக் கொண்டு செல்கின்றன. தந்தி முறைகள் கண்டு பிடிக்கப்பட்ட பின், செய்தி மிகவும் விரைவில் கொண்டு செல்லப்படுகிறது.

4. ஆங்கில ஆட்சியில் நமது நாடு பெற்ற நன்மைகளுள் அஞ்சலக ஏற்பாடு முதன்மையானது. அரசாங்கமே அஞ்சல் இலாக்காவை ஏற்படுத்தியுள்ளது. அஞ்சலகங்கள் நாடெங்கும் ஏற்பட்டுள்ளன. மக்கள் கடிதங்கள், பத்திரிகைகள், நகைகள், பணம், சிறிய பொருள்கள் இவற்றைத் தக்க கட்டணம் செலுத்தி, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் பயமின்றி அனுப்பலாம். இவற்றை நாட்டின் பலபாகங்களுக்கு அனுப்புவதுடன், உலகத்திலுள்ள பல நாடுகளுக்கு அனுப்பவும் வசதியேற்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள மக்கள், இலங்கை, மலேயா, சிங்கப்பூர், பர்மா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள தங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்,

வியாபாரிகளுக்கும், பிறர்க்கும் செய்தி அனுப்பச் சாதனமாயுள்ளது அஞ்சலகமேயாகும்.

5. அஞ்சலகத்தின் மூலமாகக் கடிதம், பணம் முதலியவற்றை அனுப்புவதற்குரிய கட்டணத்தைத் தபால் முத்திரைத் தலைகளாகவே வாங்கி, ஒட்டி அனுப்ப வேண்டும். செய்தி அனுப்பக் கார்டுகளும் உறைகளும் உள்ளன. கார்டுகளில் பொதுவான செய்திகளை எழுதி அனுப்பலாம். பிறர் அறியக்கூடாத செய்திகளைக் காகிதத்தில் எழுதி, உறையிலிட்டு, இரண்டணாத் தபால் முத்திரைத் தலை ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

6. அயல் நாடுகளுக்கு அதிகமான கட்டணம் செலுத்த வேண்டும். கார்டுகளில் இரட்டைக் கார்டுகளும் இருக்கின்றன. கடிதம் எழுதுபவர் தமக்கு உடனே பதில் கிடைக்கவும் பதில் எழுதுபவருக்குப் பணச் செலவு ஏற்படாமலிருக்கவும் இரட்டைக் கார்டுகளை உபயோகிப்பர்; ஒரு கார்டில் செய்தியை எழுதி, மற்றக் கார்டில் தம் முகவரி (விலாசம்) மாத்திரம் எழுதி அனுப்புவர். கார்டைப் பெறுகின்றவர் செய்தி எழுதிய கார்டைக் கிழித்துக்கொண்டு, மற்றக் கார்டில் செய்தியெழுதி, அஞ்சலகத்தில் சேர்த்துவிடுவர். அது அனுப்பியவருக்கு வந்து சேரும்.

7. கடிதங்கள் தவறாது போய்ச் சேரவேண்டுமானால், அவற்றைப் பதிவு (ரிஜிஸ்தர்) செய்து அனுப்புதல் வேண்டும். அஞ்சலகத்தில் இப்படிப்பட்ட கடிதங்களைப் பெற்றுக்கொண்டதற்கு இரசீது கொடுப்பார்கள். இவற்றிற்குத் தனிக் கட்டணம் வசூலிக்கப்படும்.

8. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் பணமனுப்ப மணியார்டர் பாரங்களில், அனுப்பவேண்டு-

பவர் முகவரியும், அனுப்புகின்றவர் முகவரியும், அனுப்பும் தொகையும் குறிப்பிட்டு, உரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டும். அவசரமான செய்திகளைத் தந்தியடித்துத் தெரிவிப்பார்கள். அதற்கு வார்த்தைக்கு இவ்வளவு கட்டணமென்ற கணக்குப்படி, கட்டணம் செலுத்த வேண்டும். தந்தி மூலம் பணமும் அனுப்பலாம். செய்தித் தாள்களும், புத்தகங்களும் புத்தகப் பார்சலாக அனுப்பப்படுகின்றன.

9. செய்திகளையும், பொருள்களையும் அனுப்புவதற்கு அஞ்சலகம் உதவுவதுடன், பொருட் சேமிப்பு நிலையமாயுமிருக்கின்றது. மக்கள் சிறிது சிறிதாகப் பணத்தைச் சேமித்து வைப்பதற்கு அஞ்சலகத்தில் **சேவிங்ஸ் பாங்கு** அல்லது சேமிப்பு நிதி நிலையம் என்ற பிரிவு இருக்கின்றது. இதில் நான்கணு முதல் ஐயாயிரம் ரூபாய் வரை சேமித்து வைக்கலாம். முதல் முதல் பணம் செலுத்தும்போது நமக்கு ஒரு புத்தகம் அளிக்கப்படும். அதில் நாம் சேமித்துள்ள தொகை இவ்வளவு என்பதைக் குறிப்பிட்டிருப்பர். பணம் செலுத்தும் போதும், பணம் பெற்றுக்கொள்ளும்போதும் அப்புத்தகத்தை அஞ்சலகத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும். பணம் செலுத்தியவர் தமக்குப் பதிலாகப் பிறரொருவரை அனுப்பியும் பணம் பெற்றுக் கொள்ளலாம். அதற்கெனத் தனிப்பாரம் ஒன்று உள்ளது. அதில் இன்னாருக்குக் கொடுக்க வேண்டும் என்று எழுதிக் கையொப்பமிட வேண்டும். பிறர் ஏமாற்றிச் செல்லாதபடி, பணம் சேமித்து வைப்பவர்களின் மாதிரிக் கையொப்பமுள்ள பாரங்கள் அஞ்சலகத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும். கையொப்பம் மாறுபடின், பணம் பெற்றுக்கொள்ள முடியாது.

அதனால், பணம் பெற விரும்புபவர்கள் சரியாகக் கையொப்பமிட வேண்டும்.

சொற்கள் :

அஞ்சலகம்	முட்டுப்பாடு	மாதிரி
குறிப்பிட்டவர்	இன்னல்கள்	கையொப்பம்
செய்தித்தாள்	ஷெர் ஷா	ஐயாயிரம்
கட்டணம்	ஆங்கிலேயர்	சாதனங்கள்
சிங்கப்பூர்	தந்தி	ஆகாய விமானம்
கிழித்து	இலங்கை	மலேயா
சேமிப்பு	இங்கிலாந்து	அமெரிக்கா
நிலையம்	வசூலிக்கப்படும்	உறை

கேள்விகள் :

1. முற்காலத்தில் செய்தி எவ்வாறு அனுப்பப்பட்டது ?
2. அஞ்சல் முறை நம் நாட்டில் எப்போது ஏற்பட்டது ?
3. அஞ்சலில் நாம் என்ன என்ன பொருள்களை அனுப்ப முடியும் ?
4. கடிதங்களும் மற்றப் பொருள்களும் தவருமற் போய்ச் சேர்வதற்கு என்ன செய்ய வேண்டும் ?
5. அஞ்சலகம் சிக்கனத்தை எவ்வாறு வளர்க்கின்றது ?

பயிற்சி :

1. எதிர்ச்சொல் எழுது :—

போக்கு ×	துன்பம் ×
அவசியம் ×	உள்ளது ×

2. உரை, உறை ; கிளி, கிழி—இச்சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.

இலக்கணம் :

பெயரெச்ச வினையெச்சங்கள் :

அவன் ஓடினான்.—வினைமுற்று

அவன் ஓடி விழுந்தான்—வினையெச்சம்

அவன் ஓடின இடம்—பெயரெச்சம்

'ஓடினான்'—என்ற வினைச்சொல், பொருள் முடிந்து நிற்கின்றது. அதனால், அது வினைமுற்று எனப்படும்.

'ஓடி'—என்ற வினைச்சொல், பொருள் முடியாமல் நின்று, மற்றொரு வினைச்சொல்லைக் கொண்டு முடிகிறது. அதனால், அது வினையெச்சம் எனப்படும்.

'ஓடின'—என்ற வினைச்சொல், பொருள் முடியாமல் நின்று, ஒரு பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகிறது. அதனால், அது பெயரெச்சம் எனப்படும்.

உண், செய், அனுப்பு, சேர்—இவ்வினைப் பகுதிகளைக் கொண்டு, வினையெச்சமும் பெயரெச்சமும் எழுது.



17. அன்பின் செயல்

1. நாம் ஒற்றுமையாய் வாழ அன்பு அவசியம். ஒருவரோடொருவர் அன்புடன் வாழ்தல் வேண்டும். அன்பு வேற்றுமையை ஒழிக்கும்; பிறர் செய்யும் குற்றங்களைப் பொறுக்கும், அன்புள்ளவன் பிறரைப்பற்றி இழிவாகப் பேசமாட்டான்; பிறருக்குத் துன்பம் ஏற்பட்டால், அத்துன்பத்தை நீக்குவான்; தன்சுகத்தை மாத்திரம் எண்ண மாட்டான்; தனக்குத் துன்பம் வருமென்று அறிந்தாலும், துன்பப்படு-

கின்றவர்களுக்குத் தன்னுல் இயன்ற உதவியைச் செய்வான்.

2. பாலஸ்தீன நாட்டில் இயேசுநாதர் அவதரித்தார். அவர் தாம் வாழ்ந்த காலத்தில் மக்களுக்கு அறிவுரைகளை வழங்கினுர். அவர் பிறந்த யூத வகுப்பாரில் கற்றவரும் பாமரரும் இருந்தனர். அவர் யாவரையும் சமமாகப் பாவித்தார்; யாவருக்கும் அன்புவேண்டுமென்று உபதேசித்தார். கடவுளிடமும் மற்றவர்களிடமும் அன்பு செலுத்தவேண்டும் என்பது அவர் கூறிய அறிவுரை. தாம் கூறிய உண்மைகளை மக்கள் எளிதில் அறிந்துகொள்ளும்படி அவர் விளக்கமான உவமைகளைக் கூறினுர்.

3. யூதேயா தேசத்திலுள்ள எருசலேம் நகரிலிருந்து ஒரு மனிதன் எரிகோவுக்குப் போனுன். எரிகோவுக்குச் செல்லும் வழி, வறண்ட பிரதேசம். வழியில் கள்ளர் பயம் அதிகம். அம்மனிதன் கள்ளர்களிடம் அகப்பட்டான். அவர்கள் அவனை அடித்து அவனிடம் இருந்த பொருள்களையெல்லாம் பிடுங்கிக்கொண்டார்கள்; அவன் உடைகளையும் கவர்ந்துகொண்டார்கள். அவன் குற்றுயிருடன் விடப்பட்டான். அவன் உயிர் உடலில் ஊசலாடிக்கொண்டிருந்தது; காயங்களிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அவன் மிகுந்த வேதனையினுல் அரற்றிக்கொண்டிருந்தான்.

4. அச்சமயத்தில் யூதர்களில் பூசாரி வகுப்பைச் சார்ந்த ஆசாரியன் ஒருவன், அவ்வழியே சென்றுன். அவன் வழியிற்கிடந்த மனிதனைக் கண்டும், அவனுக்கு உதவி செய்ய விரும்பாமல், சென்று விட்டான்.

5. சிறிது நேரம் கழித்து, ஒரு லேவியன்

அங்கு வந்தான். அவனும் பூசாரி வகுப்பைச் சேர்ந்தவனே. அவனும் காயமுற்றவனைக் கண்டான். அவனுக்கும் மனத்தில் ஈரமில்லை. அவனும் விரைவாக அவ்விடத்திலிருந்து சென்றுவிட்டான்.

6. அவ்வழியே **சமாரியன்** ஒருவன் வந்தான். அவன் யூதரால் இழிந்தவனாகக் கருதப்பட்டவன். ஆயினும், துன்பத்திலிருந்த யூதனைக் கண்டதும், அவன் மனம் இளகியது. அவனுக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்யவேண்டுமென்று அவன் தீர்மானித்தான்; உடனே யூதன் பக்கத்தில் சென்று, அவன் காயங்களில் திராட்சை ரசத்தை ஊற்றி, தான் கொண்டு வந்திருந்த எண்ணெயைப் பூசினான்; காயங்களைத் துணியினால் கட்டினான்; மெதுவாக அவனைத் தூக்கித் தான் ஏறிவந்த மிருகத்தின்மீது ஏற்றிப் பக்கத்திலிருந்த சத்திரத்துக்குக் கொண்டுபோனான்; சத்திரக்காரனை அழைத்து, "ஐயா, இம்மனிதனை நன்றாகக் கவனித்துக்கொள்ளுங்கள்; இவனுக்கு நீங்கள் செய்யும் செலவை நான் திரும்பி வரும்போது உங்களுக்குக் கொடுத்துவிடுவேன்," என்று சொல்லிச் சிறிது பணத்தை அவனிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

7. ஆசாரியனும் லேவியனும் யூத வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்த போதிலும், தங்கள், உறவினனுக்கு உதவி செய்யவில்லை. ஆனால், அயலானாகிய சமாரியன் அன்பினால் அவனுக்கு உறவினனானான். அன்புள்ளவரே உறவினராவர்.

சொற்கள் :

ஒழிக்கும்	பொறுக்கும்	வறண்ட
இயன்ற	உவமை	ஊசலாடி
கவர்ந்து	உடைகள்	பூசாரி
வேதனை	அரற்றி	இளகியது
காயம்	ஈரம்	செலவு
சத்திரம்	இழிவாக	அயலான்

கேள்விகள் :

1. இயேசுநாதர் கூறிய சிறந்த அறிவுரை யாது?
2. எரிகோவுக்குச் சென்ற யூதனுக்குச் சம்பவித்தது என்ன?
3. லேவியன் யூதனுக்கு ஏன் உதவி செய்யவில்லை?
4. காயமுற்றவனுக்கு உதவி செய்தவன் யாவன்?
5. அவன் சத்திரக்காரனிடம் கேட்டுக்கொண்டது என்ன?

பயிற்சி :

1. முதல் பத்தியில் காணப்படும் ஒரே பொருளுள்ள சொற்களை எழுது.
2. இயன்ற, அஞ்சினன், அபாயம், சிறிதும்—இச்-சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.
3. 'கட்டு' என்னும் வினைச்சொல்லிலிருந்து முக்-கால வினைமுற்றுக்களும் பெயரெச்ச வினையெச்சங்களும் எழுது.

இலக்கணம் :

வாக்கிய உறுப்புக்கள் :

அவர் அறிவுரையை வழங்கினர்.—இவ்வாக்கியத்தை முடிக்குஞ் சொல் 'வழங்கினர்' என்பது. இதுவே பயனிலை.

பயனிலைக்கு முன் 'யார்' அல்லது 'எது' என்னும் சொல்லை வைத்துக் கேள்வி கேட்டால், வரும் விடை எழுவாய் ஆகும். 'யாரை' அல்லது 'எதை' என்னும் சொல்லை வைத்து வினவினால், வரும் விடை செயப்படுபொருள் ஆகும். பயனிலை வழங்கினர். யார் வழங்கினர்? அவர் வழங்கினர். 'அவர்' என்பது எழுவாய். எதை வழங்கினர்? அறிவுரையை வழங்கினர். 'அறிவுரை' என்பது செயப்படுபொருள்.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவை வாக்கிய உறுப்புக்கள்.

பின் வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் குறிப்பிடுக :—

1. யூதர்கள் சமாரியரைப் பகைத்தார்கள்.
2. நான் அதைக் கொடுத்தேன்.
3. அன்பு வேற்றுமையை ஒழிக்கும்.

18. நாட்குறிப்பு எழுதுதல்

மாணவர் ஒரு குறிப்புப் புத்தகம் வைத்துக்கொண்டு, நாள்தோறும் தம் வாழ்க்கையில் நிகழும் முக்கியமான நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். அக்குறிப்பே, குறித்த வேலைகளைத் தவறாமல் செய்து முடிக்கவும், எவற்றையும் ஒழுங்காகச் செய்யவும், முன் நடந்தவைகளைப் பின் நினைத்துப் பார்க்கவும் உதவியாய் இருக்கும். இவ்வழக்கத்தைச் சிறுவர் தம் இளமைப் பருவத்திலிருந்தே மேற்கொள்ளுதல் வேண்டும். சுந்தரம் என்பவன் எழுதிய நாட்குறிப்புக்களுள் சிலவற்றை அடியிற் காணலாம்.

மங்களபுரி :

6–7–52 : கோடை விடுமுறைக்காகத் தூத்துக்குடிக்குச் சென்றிருந்த என் தங்கையும் நானும் மங்களபுரிக்குத் திரும்பினோம்.

7–7–52 : எங்கள் பள்ளிக்கூடம் கோடை விடுமுறைக்குப்பின் ஆரம்பமாயிற்று. என் தந்தையார் என்னை அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடம் சென்றார் ; தலைமையாசிரியரைக் கண்டு என்னைப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளும்படி கூறினார். கடந்த வருடம் நான்காம் வகுப்பிலிருந்த நான், ஐந்தாம் வகுப்புக்கு மாற்றப்பட்ட செய்தியறிந்து மகிழ்ச்சியடைந்தேன். என் தந்தையார் பள்ளிக்கூடக் கட்டணம் செலுத்திய பின் வீட்டுக்குச் சென்றார். நான் பள்ளிக்கூடத்திலிருந்து மாலை ஐந்து மணிக்கு வீடு திரும்பினேன்.

8–7–52 : வழக்கம்போலப் பள்ளிக்கூடம் சென்றேன். புதிய ஆசிரியர் எங்கள் வகுப்பிற்கு வந்தார். அவர் பாளையங்கோட்டையில் வேலை பார்த்தவர் ; மற்ற ஆசிரியர்களைவிட அழகான ஆடை அணிந்தவர் ; நன்றாகப் பாடங்கற்பிக்கின்றார்.

9–7–52 : என் அம்மானார் திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்தார். எனக்கும் என் தங்கைக்கும் விளையாட்டுச் சாமான்களும், சிற்றுண்டிகளும் வாங்கி வந்தார். அவருடன் ஊரைச் சுற்றி வரச் சென்றேன்.

10–7–52 : இன்று பள்ளிக்கூட விடுமுறை நாள். நானும் என் நண்பர்களும் சோலையில் சென்று விளையாடினோம். அதிக நேரம் விளையாடியதற்காக என் தந்தையார் என்னைக் கண்டித்தார்.

11–7–52 : இன்று விடுமுறை நாள்.

12–7–52 : விடுமுறை கழிந்து, பள்ளிக்கூடம் சென்றேன். புதிய புத்தகங்கள் வாங்கினேன். ஆங்கிலப் புத்தகம் எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. முதலாம் படிவத்திலேதான் ஆங்கிலம் படிக்க வேண்டும் என்று ஆசிரியர் கூறினார்.

15–8–52 : இன்று நம் நாடு சுதந்தரம் பெற்ற நாள். எங்களுக்கு விடுமுறை. நாங்கள் அதிகாலையில் பள்ளிக்கூடத்துக்குச் சென்றோம். இவ்வூர்க் கிராமாதிகாரியும், போலீஸ் அதிகாரியும், பெரியவர் பலரும் எங்கள் பள்ளிக்கு வந்தனர். எங்கள் தலைமையாசிரியர் கொடிக் கம்பத்தின் அருகில் நின்று கொடியேற்றினார். நாங்கள்

வரிசையாய் நின்று, தேசீய கீதம் பாடினோம். எங்களுக்குச் சிற்றுண்டி வழங்கினர். சுதந்தர-தினத்தைப் பற்றி எங்கள் ஆசிரியர் பேசினர். பின்பு நாங்கள் வீடு திரும்பினோம்.

சொற்கள் :

குறிப்பு	நிகழும்	நிகழ்ச்சி
மேற்கொள்ளுதல்	ஞாபகம்	தவருமல்
கோடை	கடந்த	நேர்த்தியான
சிற்றுண்டி	அதிகாரி	ஆங்கிலம்
கொடிக்கம்பம்	தேசீயம்	கீதம்

பயிற்சி :

1. நாட்குறிப்பை மௌனமாக வாசித்து, நீ கடந்த ஏழு நாட்களில் செய்தவற்றை வரிசையாக எழுது.

2. சுதந்தர விழா நாளன்று உங்கள் ஊரில் நடை-பெற்றதை எழுது.

இலக்கணம் :

தோன்ரு எழுவாய் :

காலையில் எழுந்தேன்.—இவ்வாக்கியத்தில், நான் என்னும் எழுவாய் மறைந்து நிற்கின்றது. இவ்வாறு, எழுவாய் மறைந்து நிற்பது தோன்ரு எழுவாய் எனப்-படும்.

செயப்படுபொருள் குன்ரு வினை, குன்றிய வினை :

பயனிலைக்கு முன் 'எதை' அல்லது 'யாரை' என்னும் சொற்களில் ஒன்றை வைத்துக் கேள்வி கேட்டால், விடை பெறுவது செயப்படுபொருள் குன்ரு வினை ; விடை பெருதது செயப்படுபொருள் குன்றிய வினை.

19. பயிர்த்தொழில்

1. நாம் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம். தானியங்களும் காய்கனிகளும் கிழங்குகளும் இன்னும் பல பொருள்களும் நமக்கு உண்ணும் பொருள்களாகின்றன. இவற்றுள், தானியங்களே முக்கிய உணவுப்பொருள்களாகும். நிலத்தை உழுது, பண்படுத்தி, விதை விதைத்துப் பயிர் செய்யும் பயிர்த் தொழிலாலேதான் தானியங்கள் கிடைக்கின்றன. ஆதலால், பயிர்த்தொழிலே மக்களுக்கு இன்றியமையாத தொழிலாகும்.

2. பயிர்த்தொழிலை **உழவுத்தொழில், வேளாண்மை, கிருஷித் தொழில், விவசாயம்** எனப் பல பெயர்களால் வழங்குவர். பயிர்த்தொழில் நடைபெறும் நிலம், **'நன்செய், புன்செய்'** என இரு வகைப்படும். நெல் விளையும் நிலத்தை நன்செய் என்றும், மற்றத் தானியங்கள் விளையும் நிலத்தைப் புன்செய் என்றும் வழங்குவர்.

3. புன்செய் நிலத்தில் விளையும் பயிர்களுக்குத் தண்ணீர் அதிகம் வேண்டுவதில்லை; மழை நீரே

போதுமானது. விதைத்த பின் பயிர் தானே வளர்ந்து பலன் கொடுக்கின்றது. புன்செய் நிலத்தில் எள், பயிறு, சாமை, கேழ்வரகு, துவரை, கம்பு, வரகு, சோளம் முதலிய தானியங்கள் விளைகின்றன.

5. நன்செய் நிலத்தில் நெல் விளையும். நெற்பயிருக்குத் தண்ணீர் அதிகம் வேண்டும். ஆதலால், தண்ணீரில்லாத இடங்களில் நெற்பயிர் செய்ய முடியாது. குடியானவர்கள் நிலத்தை உழுது, பரம்படிக்கிறார்கள். நெற்பயிருக்கு மற்றப் பயிர்களைவிட அதிக உரம் இடவேண்டும். நிலத்தைப் பண்படுத்திய பின் தண்ணீர் பாய்ச்சுவார்கள். விதைப்பதற்குமுன், விதைகளைத் தண்ணீரில் ஊறவைத்துப் பின்பு விதைப்பார்கள். விதைத்த பின் இரண்டு மூன்று நாட்களுக்குத் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடாது. தண்ணீர் பாய்ச்சாமல் புழுதியில் விதைப்பதுமுண்டு. தண்ணீர் தேங்கி நின்றால், முளைகள் அழுகிவிடும். பயிர்

வளரும்போது களைகளைப் பிடுங்குவார்கள். பயிர் ஓரடி உயரம் வளர்ந்த பின், அதைப் பிடுங்கி வரிசையாக நடுவார்கள். இவ்வாறு நடுவதால், பயிர்கள்

செழித்து வளரும். இதையே **நாற்று நடுதல்** என்பார்கள்.

6. ஒழுங்காகத் தண்ணீர் பாய்ச்சி, களை பிடுங்கி வந்தால், பயிர் நன்றாய் வளர்ந்து கதிர்விடும். பயிர் முதலில் பசுமை நிறமாயிருக்கும். நெல்மணிகள் முற்றமுற்ற மஞ்சள் நிறமாகும். கதிர் முற்றிய பின், பயிரைத் தாள்களுடன் அரிவாளால் அறுப்பார்கள். அரிந்த கதிர்களைக் கட்டுக்களாகக் கட்டிக் களத்திற்குக் கொண்டு போவார்கள்.

7. கட்டுக்களைப் பிரித்துக் கற்றை கற்றையாக எடுத்துத் தரையில் மோதி அடிப்பார்கள். அப்போது நெல் மணிகள் உதிரும். நெல் மணிகளைச் சேர்த்துக் குவியலாகக் குவிப்பார்கள்; குவியலிலிருந்து முறங்களில் அள்ளித் தூற்றுவார்கள். அப்போது பதர்கள் காற்றில் பறந்துவிடும். நல்ல மணிகளைச் சேர்த்து மூட்டை மூட்டையாகக் கட்டி வீட்டுக்கு எடுத்துச் செல்வார்கள்.

8. நெல் மணிகள் உதிர்ந்த பின், தாள்களைப்

பூமியில் பரப்பி அவற்றின் மீது காளைகளையும் எருமைகளையும் கட்டி ஒட்டி மிதிக்கச் செய்வார்கள். அவை வட்டமாகச் சுற்றி வரும். இதைப் **பிணையடித்தல்** என்பார்கள். இவ்வாறு செய்வதனால், தாள்களில் ஒட்டியிருக்கும் மீதியான நெல் மணிகள் உதிர்ந்துவிடும். மணிகள் நீங்கிய தாள்களே வைக்கோல். வைக்கோற்குவியலைப் போர் என்பார்கள். வைக்கோல் மாடுகளுக்கு ஆகாரமாகின்றது.

9. பயிர்த்தொழில் நடைபெறுவதனாலேதான், மக்களுக்கும் மிருகங்களுக்கும் ஆகாரம் கிடைக்கின்றது. உழவுத்தொழில் இல்லாவிட்டால், உயிர்கள் உயிர் வாழமுடியாது. இதைக் கருதியே நம்முன்னோர் 'உழவே தலை,' என்று கூறியுள்ளனர்.

சொற்கள் :

நன்செய்	கேழ்வரகு	உழவுத்தொழில்
புன்செய்	நெற்பயிர்	கிருஷித்தொழில்
துவரை	ஊற வைத்து	குடியானவர்
சோளம்	அழுகிவிடும்	விதைப்பார்கள்
வரகு	முறங்களில்	நாற்று
புழுதி	பிணையல்	அரிவாள்
அள்ளி	பண்படுத்தி	குவியல்
விவசாயம்	இன்றயமையாத	தூற்றுவார்கள்

கேள்விகள் :

1. பயிர்த்தொழிலுக்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை ?
2. நன்செய், புன்செய்களில் விளைவன யாவை ?
3. நெல் பயிர் செய்யும் முறை என்ன ?
4. நெல் பயிரை அறுவடை செய்வது எப்படி ?
5. நெற்கதிர்களிலிருந்து நெல்லை வேருக்குவது எப்படி ?

பயிற்சி :

1. கற்றைகற்றையாக, மூட்டை முட்டையாக, முற்ற-முற்ற—இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. பிரித்து, தண்ணீர், ஒழுங்காக—எதிர்ச்சொற்கள் எழுது.

3. உழுது, பண்படுத்தி, பாய்ச்சுவார்கள், அரிந்த, நீங்கிய—இவை என்ன சொற்கள் ?

இலக்கணம் :

(புணர்ச்சி : நிலைமொழி வருமொழிகள் சேர்தல்)

நிலைமொழி		வருமொழி		தொடர்
மலர்	+	அணிந்தான்	=	மலரணிந்தான்
மலர்	+	மாலை	=	மலர் மாலை

நிலைமொழியும் வருமொழியும் வேறுபாடு இல்லாமல் சேர்ந்தன—இது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

முதலில் எழுதப்படும் சொல் நிலைமொழி. அதனுடன் சேர்த்து எழுதப்படும் சொல் வருமொழி. நிலைமொழியின் கடைசி எழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தும் சேர்ந்-தும் சேராமலும் சொற்கள் சேரும்.

மலர்—கடைசி எழுத்து 'ர்'—மெய்யெழுத்து.

அணிந்தான்—முதல் எழுத்து 'அ'—உயிர் எழுத்து. அதனால், இரண்டு எழுத்துக்களும் சேர்ந்து 'ர' என்ற ஓரெழுத்து ஆயிற்று.

கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்—'ல்'—புதிதாகத் தோன்றியது.

மரம் + வேர் = மரவேர்— 'ம்' —கெட்டது.

பல் + பொடி = பற்பொடி —'ல்' என்ற மெய் 'ற்' என்ற மெய்யாய்த்திரிந்தது.

இவை, ஓர் எழுத்துத் தோன்றியும், கெட்டும், திரிந்-தும் சேர்ந்தன. இது விகாரப்புணர்ச்சி எனப்படும்.

விகாரப்புணர்ச்சி, நிலைமொழியும் வருமொழியும் வேறுபாட்டுடன் சேர்தல்.

20. பத்திரிகைச் செய்தி

தினமணி :

செய்தி–1

எட்டையபுரம்: செப்டெம்பர், 21.—எட்டையபுரம் ராஜா இலவசப்பள்ளி மாணவ மாணவிகள் காலை 7 மணிக்கு ஆசிரியர்களுடன் தூத்துக்குடிக்கு உல்லாசப் பிரயாணம் புறப்பட்டார்கள். போகும் வழியில் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்று, **கட்டபொம்மன் ஊமைத்துரை** என்ற வீரர்கள் அரசாண்ட இடங்களையும், அவர்கள் யுத்தம் செய்த இடங்களையும் பார்த்துவிட்டு, தூத்துக்குடிக்குத் தண்ணீர் உதவும் **வல்லநாட்டுத் தண்ணீர்த் தேக்கத்**தையும் பார்வையிட்டனர். அதன் பின்னர், தூத்துக்குடியில் முக்கியமான இடங்களைப் பார்வையிட்டனர்.

செய்தி–2

கிழக்கு ஆப்பிரிக்காவில்
காந்திஜி ஞாபகர்த்தக் கல்லூரி
ஐந்து லக்ஷம் ரூபாய்ச் செலவில் கட்டத் திட்டம்

நைரோபி : செப். 26—மகாத்துமா காந்திஜியின் ஞாபகார்த்தமாகக் கிழக்கு ஆப்பிரிக்காவில் ரூ. 5 லக்ஷம் செலவில் கல்லூரி கட்ட இந்தியக் கல்வி நிபுணர் திட்டமிட்டிருக்கிறார்.

இதற்கு 2,50,000 ரூபாய் கிழக்கு ஆப்பிரிக்க மக்களிடம் நன்கொடையாக வசூலிக்க முடியுமென்றும், பாக்கியைச் சென்னைச் சர்க்காரிடமிருந்து

பெற முடியுமென்றும் டாக்டர். ஆர். கே. ராஜ்நாக் நம்பிக்கை தெரிவித்தார். திட்டம் தயாரித்துள்ள அவர் அக்டோபர் 2-ஆம் தேதி காந்தி ஜயந்தியன்று இந்த நிதிக்காக வேண்டுகோள் விடுக்கப்படுமென அறிவித்தார்.

செய்தி–3

பள்ளியில் பாரதி விழா

மதுரை: செப். 15—வெள்ளியம்பலம் ஆரிய வைசிய உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் தமிழ்க் கழக ஆண்டு விழாவும், அமரகவி பாரதியின் நினைவு-நாளும் 11ல மாலை இப்பள்ளி நிருவாகி டாக்டர் எம். வேங்கடாசலம் செட்டியார் தலைமையில் நடந்தேறியது, அதில் 'பாரதியார் ஒரு தேசபத்தர், பெண் குலம் காப்பவர், ஒரு தீர்க்கதரிசி' என்னும் பொருள் பற்றி மாணவ மாணவிகள் சொற்பொழி-வாற்றினர்கள். மாணவிகள் பாரதி இயற்றிய கீதங்-களை இசைத்தார்கள். விழாவில் பங்கெடுத்துக் கொண்ட மாணவ மாணவிகளுக்கு விழாத்தலைவரால் பரிசுகள் வழங்கப்பட்டன. தலைமையாசிரியர் திரு. எஸ். மகாதேவய்யர் வந்தனோபசாரம் கூறினர்.

சொற்கள்:

பாஞ்சாலங்குறிச்சி	இலவசப்பள்ளி	தேக்கம்
கட்டபொம்மன்	ஊமைத்துரை	யுத்தம்
பார்வையிட்டனர்	ஞாபகார்த்தம்	நிபுணர்
தயாரித்துள்ளனர்	வேண்டுகோள்	திட்டம்
வெள்ளியம்பலம்	ஆண்டு விழா	நிருவாகி
தீர்க்கதரிசி	சொற்பொழிவு	டாக்டர்

கேள்விகள் :

1. எட்டையபுர மாணவ மாணவிகள் தூத்துக்குடிக்குச் செல்லும் வழியில் கண்டவை யாவை ?

2. கிழக்கு ஆப்பிரிக்காவில் இந்திய கல்வி நிபுணர் திட்டமிட்டிருப்பது என்ன ?

3. பாரதி விழாவில் மாணவ மாணவிகள் எவற்றைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள் ?

பயிற்சி :

1. உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நடைபெற்றதைப் பத்திரிகைக்கு எழுதுவது போல எழுது.

2. உங்கள் ஊருக்குப் பெரியார் ஒருவர் விஜயஞ்செய்த செய்தியைப் பத்திரிகைக்கு எவ்வாறு எழுதி அனுப்புவாய் ?

3. தீர்க்கதரிசி, காந்தி ஜயந்தி, சொற்பொழிவு—இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுது.

4. திரு. =திருவாளர்.
செப். =செப்டெம்பர்.
௵ =வருஷம் ௴=மாதம், ௳=தேதி.

இவை சொற்கள் சுருக்கமாக எழுதப்படும் முறை. சுருக்கமான முறையில் சொற்கள் எழுதப்படுவதற்கு வேறு இரு உதாரணங்கள் எழுது.

இலக்கணம்

புணர்ச்சி :

கலம் + உடைந்தது—கலமுடைந்தது—மெய்யெழுத்துடன் உயிர் சேர்ந்தது.

கண் + இழந்தான்—கண்ணிழந்தான்—கண் + ண் + இழந்தான்.

தனிக் குற்றெழுத்துக்குப் பின்வரும் மெய் உயிருடன் சேரும்போது இரட்டித்தது.

சேர்த்தெழுது :—

நூல் + ஓதினேம், பார் + ஆண்டான், கடல் + அலை, பலன் + இல்லை, தன் + உடைமை, மண் + அரசர்.

21. பொருட்காட்சிச்சாலை

பொன்னன் : அண்ணா, பொருட்காட்சி என்பது என்ன ?

மாணிக்கம் : தம்பீ, நமது நாட்டில் பல இடங்களில் வெவ்வேறு பொருள்கள் செய்யப்படுகின்றன. அப்பொருள்களை ஓரிடத்திற்கொண்டு வந்து, ஒழுங்கான முறையில் அமைத்து, எல்லாரும் காணும்படி வைத்திருப்பதே பொருட்காட்சி எனப்படும். அந்த இடத்தைப் பொருட்காட்சிச்சாலை என்பர்.

பொன்னன் : அவற்றைப் பார்ப்பதனால் என்ன நன்மை ?

மாணிக்கம் : புதிய பொருள்களைப் பார்க்கும் போது, நமக்கு இன்பம் உண்டாகின்றது ; அப்பொருள்களைச் செய்கின்றவர்களின் வேலைத் திறன் விளங்குகின்றது; வியாபாரிகள் தங்கள் பொருள்களை விளம்பரப்படுத்துவதனுல், வியாபாரம் பெருகுகின்றது ; பொருள்களைச் செய்யும் முறைகளைக் காண்பதனுல், நம் அறிவு விருத்தியாகின்றது ; நாட்டில் கைத்தொழிலறிவு வளர்கின்றது.

பொன்னன் : பொருட்காட்சியை எவ்வாறு நடத்துகின்றனர் ?

மாணிக்கம் : நகர பரிபாலன சபையார் பொருட்காட்சியை நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கின்றனர். பின்பு, அதை நடத்துவதற்குச் சிலரை நியமிக்கின்றனர். அவர்களுள் தலைவரும், காரியதரிசியும், நிருவாக உறுப்பினரும் சேர்ந்து, பொருட்காட்சி நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றனர் ; முதலில் பல பக்கங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து பார்ப்பதற்கு வசதியான இடத்தை ஏற்படுத்துகின்றனர். பின்பு பொருட்காட்சி நடைபெறுவதைப் பத்திரிகைகள், துண்டுக் காகிதங்கள் மூலம் விளம்பரம் செய்கின்றனர். வியாபாரிகள் தங்கள் பொருள்களை வியாபாரஞ் செய்வதற்காக அங்குக் கொண்டு வந்து வைப்பார்கள். அவர்கள் குறிப்பிட்ட கட்டணம் செலுத்த வேண்டும். அரசாங்கத்தார் விவசாயக் கருவிகள், பட்டுப்பூச்சிகளை வளர்த்துப் பட்டு நூல் எடுக்கும் விதத்தைக் காண்பிக்கும் சாதனங்கள் முதலியவற்றை அமைத்து,

அவற்றைப்பற்றி, ஜனங்களுக்கு விளக்கிக்கூற ஆட்களையும் அனுப்புவர். நிருவாக உறுப்பினர் அவர்களுக்கு வேண்டும் வசதிகளைச் செய்வர்.

பொன்னன் : அண்ணு, பொருட்காட்சிச் சாலையினுள் எல்லாரும் செல்ல அனுமதிப்பார்களா ?

மாணிக்கம் : தம்பீ, அதற்கென்று அனுமதிச்சீட்டு விற்கின்றுர்கள். அதைப் பெற்றுக்கொண்டவர்கள் உள்ளே செல்லலாம்.

சொற்கள் :

பொருட்காட்சி	வேலைத்திறன்	விளம்பரம்
ஒழுங்கு	கைத்தொழிலறிவு	பரிபாலனம்
விருத்தி	நிருவாகம்	தீர்மானம்
காரியதரிசி	உறுப்பினர்	சாதனம்

கேள்விகள் :

1. 'பொருட்காட்சிச்சாலை ? என்பது என்ன ?
2. அங்குச் சென்ருல், என்ன பொருள்களைக் காணலாம் ?
3. பொருட்காட்சியை எவ்வாறு நடத்துகின்றனர் ?
4. பொருட்காட்சிச் சாலையினுள் போக என்ன செய்ய வேண்டும் ?

பயிற்சி :

'பொருட்காட்சியும் அதன் பயனும்' என்பதைப்பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுது.

இலக்கணம் :

எழுத்து மிகுதல்

(1) அவனை + பார்த்தேன் = அவனைப் பார்த்தேன்—ப்.
ஏழைக்கு + கொடுத்தான் = ஏழைக்குக் கொடுத்தான்—க்.

(2) எடுத்து + சென்றான் = எடுத்துச் சென்றான்—ச்.

(3) அந்த + தேர் = அந்தத் தேர் = த்.
இந்த + சுவர் = இந்தச் சுவர் = ச்.

(1) இரண்டாம் வேற்றுமை உருபும், நான்காம் வேற்றுமை உருபும் வந்த சொல்லின் பின் வல்லினமெய்கள் வந்தால், அந்த மெய் மிகும்.

(2) வினையெச்சத்தின் பின் வல்லினமெய் மிகும்.

(3) அ, இ என்ற சுட்டெழுத்துக்கள் திரிந்த அந்த, இந்த என்ற சொற்களின் பின்வரும் வல்லினமெய் மிகும்.

22. அரச நீதி

(நாடகம்)

காட்சி-1

நடிகர் :	நூர்ஜஹான் (ஜஹாங்கீரின் மனைவி)
	நிர்மலா (நூர்ஜஹானின் தோழி)
இடம் :	அரண்மனையின் அந்தப்புரம்
காலம் :	காலை

நூர்ஜஹான் : தோழீ, பூஞ்சோலையிற்சென்று மலர்களைக் கண்டு களிக்க என் மனம் அவாவுகின்றது ; நீயும் என்னுடன் வருகின்றாயா ?

நிர்மலா : மகாராணியாரே, உங்கள் விருப்பப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்.

நூர்ஜஹான் : வா, சிறிது நேரம் இன்பமாகப் பொழுது போக்குவோம்.

(இருவரும் பூஞ்சோலைக்குச் சென்று சிறிது நேரம் உலாவுகின்றனர்.)

நூர்ஜஹான் : நிர்மலா, அந்தப்புரத்தில் அடைக்கப்பட்டிருக்கும் நமக்கு இவ்வாறு வெளியே சிறிது நேரம் உலாவி வருதல் தேகத்துக்கு நன்மையை அளிக்குமென எண்ணுகிறேன்.

நிர்மலா : உங்களுக்கு விருப்பமெதுவோ அதனை நிறைவேற்றத்தான் சக்கரவர்த்தியாரவர்கள் காத்துக்கொண்டிருக்கின்றார்களே ! உங்கள் விருப்பத்தை ஏன் தெரிவிக்கக் கூடாது ?

நூர்ஜஹான் : சக்கரவர்த்தியாரைப் பற்றி எனக்கு அச்சமில்லை. அவர்கள் நான் எங்குச் சென்றாலும் அதைப்பற்றி ஒன்றும் சொல்லமாட்டார்கள்.

சக்கரவர்த்தியாரின் மைந்தர் குர்ரத்தைப் பற்றித்-தான் சிறிது யோசிக்க வேண்டுவதாகின்றது.

நிர்மலா : அம்மையீர், இளவரசரைப்பற்றி உங்க-ளுக்கு என்ன ?

நூர்ஜஹான் : இளவரசரைப்பற்றி நீ ஒன்றும் அறிய மாட்டாய்; அவருக்கு என்மீது அன்பு இல்லை. அவருக்காகவேதான்.............தோழீ, இப்போதுதான் நினைவிற்கு வருகின்றது! சக்கர-வர்த்தியார் எனக்கு வில்லொன்று வாங்கிக்-கொடுத்திருந்தாரே! அதைப் பயில மறந்து-விட்டேனே!

நிர்மலா : மறந்துவிட்டால் என்ன! இன்று முதல் ஆரம்பிக்கலாமே!

நூர்ஜஹான் : தோழீ, நீ சொல்வது சரி; இப்-பொழுதே ஆரம்பிப்போம்! காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்! விரைவிற்சென்று அதனைக் கொண்டுவா!

நிர்மலா : அப்படியே செய்கிறேன்!

(அரண்மனையுள் சென்று வில்லும் அம்பும் கொண்டு வருகிருள்.)

நூர்ஜஹான் : நிர்மலா, நேரமாகின்றது! சீக்கிரம் வில்லையும் அம்பையும் கொண்டுவா. இதோ, இம்மரத்தைக் குறி வைத்து எய்கிறேன்.

நிர்மலா : முதலில் மரத்தின் அடியைக் குறிவைத்து வெற்றி பெறுங்கள்.

நூர்ஜஹான் : தோழீ, முன்னரே சிறிது பயிற்சி செய்திருக்கிறேன். இதோ, கிளையின்மீதுள்ள மலரைக் குறி வைக்கிறேன்.

நிர்மலா : அம்மையீர், மலரைக் குறி வைத்து எய்தால், அம்பு மதிலுக்கு அப்பாற் சென்றுவிடும்! கவனித்துக்கொள்ளுங்கள் !

நூர்ஜஹான் : நிர்மலா, நீ இன்னும் என் திறமையை அறியவில்லை! அதனால்தான் நீ அஞ்சுகின்றாய். இதோ பார்! (அம்பை விடுகின்றாள்) ஐயோ! குறி தவறிவிட்டதே!

(வெளியிலிருந்து 'ஐயோ!' என்ற அலறல்)

நிர்மலா : மகாராணியீர், என்ன செய்துவிட்டீர்கள் !

நூர்ஜஹான் : (திடுக்கிட்டு) என்ன சொல்லுகின்றாய்? விரைவில் வெளியே சென்று அம்பு யார்மீது பாய்ந்து விட்டதெனப் பார்த்துவா! (நிர்மலா வெளியே செல்லுகிறாள்.)

காட்சி–2

நடிகர் :	காளிமுத்து—சலவைத் தொழிலாளி சுடலை—காளிமுத்தின் மனைவி
இடம் :	ஜஹாங்கீர் அரண்மனையின் அந்தப்புரத்துக்கருகிலுள்ள நீர்த்துறை
காலம் :	காலை

காளிமுத்து : அடியே, சுடலை, சீக்கிரம் கஞ்சியேற்று. இன்றைக்குள் துணிகளை வெளுத்து வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுத்து விட வேண்டும்.

சுடலை : என்ன அவசரம்? வெளுத்த துணிகளை உலரவிட்டு வா. கஞ்சியேற்றிப் பின்னால் முறுக்கிக்கொள்வோம்.

(காளிமுத்து, துணிகளை மதிலோரமாய் உலரவைத்-துக் கொண்டிருக்கிறன். அம்பொன்று மார்பில் பாய, 'ஐயோ!' என்று அலறி விழுகிறன்.)

சுடலை : ஐயோ! கீழே விழுந்து விட்டாரே!

(காளிமுத்து விழுந்த இடத்தை நோக்கி ஓடுகிறள். அச்சமயம் நிர்மலாவும் அங்கே வருகிறள். காளி-முத்தின் மார்பில் அம்பு பாய்ந்திருப்பதைக் காண்கிறர்கள்.)

சுடலை : ஐயோ! இந்தக் கொடுமையைச் செய்தவர் யார்?

காளிமுத்து : உயிர் போகின்றதே! ஐயோ! (மண்ணில் சாய்கிறன்)

சுடலை : ஐயோ! தெய்வமே! எந்தப் பாதகன் இதைச் செய்தானே, தெரியவில்லையே!

நிர்மலா : பெண்ணே, வருந்தாதே! எல்லாம் தெய்-வச் செயல்! (தனக்குள்ளே 'மகாராணியாரியின் செயல் அல்லவா இது?') மகாராணியாரிடம் சொன்னல் உதவி செய்வார்கள்; வருந்தாதே!

சுடலை : அம்மா, மகாராணியார் என்ன செய்ய-முடியும்? சக்கரவர்த்தியாரிடம் சொல்லுகிறேன்; கொலைபாதகனைத் தண்டிப்பார். (செல்கிறள்.)

(நிர்மலா அந்தப்புரம் சென்று செய்தியைத் தெரிவிக்-கின்றள்.)

காட்சி–3

நடிகர் :	ஜஹாங்கீர், அமைச்சர் முதலியவர்
இடம் :	அரண்மனே
காலம் :	காலே

(சுடலே அரண்மனேயை அடைந்து, அரண்மனேயின் முன் தொங்கவிடப்பட்டிருக்கும் ஆராய்ச்சி மணியை அடிக்கிருள்.)

காவலன் : பெண்ணே, தலேவிரி கோலமாய் நிற்கின்ருயே! என்ன காரணம்?

சுடலே : ஐயா, என் கணவனே எந்தப் பாதகனே கொன்றுவிட்டான்! சக்கரவர்த்தியாரிடம் முறையிட வந்தேன்.

காவலன் : சக்கரவர்த்தியாரிடம் தெரிவிக்கின்றேன். இங்கே நில். (ஜஹாங்கீர் முன் சென்று வணங்கி,) மாட்சிமை பொருந்திய சக்கரவர்த்தியார் அவர்களே, நமது அரண்மனேயின் வாயிலில் பெண்ணெருத்தி உங்களிடம் முறையிட வந்திருக்கிருள்.

ஜஹாங்கீர் : பெண் வந்திருக்கிருளா! உடனே இங்கே வரச்சொல்!

(சுடலேயைக் காவலன் அரசரிடம் அழைத்து வருகிருன். அவள் தரையில்விழுந்து வணங்குகிருள்.)

ஜஹாங்கீர் : பெண்ணே, நீர் நிறைந்த கண்களுடன் இங்குவந்து நிற்க உனக்கு என்ன தீங்கு நேரிட்டது?

சுடலே : மேன்மை தங்கிய மகாராஜாவே, நானும் என் கணவரும் அரண்மனேயின் அந்தப்புரத்-

துக்கு எதிரிலுள்ள நீர்த்துறையில் துணிகளைத் துவைத்துக்கொண்டிருந்தோம். என் கணவர் துணியை உலர்த்துவதற்காக மதிற்சுவர் பக்கத்தில் சென்றார். திடீரென் ஓர் அம்பு அவர் மார்பில் பாய்ந்தது! கீழே விழுந்து இறந்துவிட்டார்! அதை உங்களிடம் முறையிட வந்தேன்.

ஜஹாங்கீர் : (அமைச்சரைப் பார்த்து) அந்தப்புரத்துக்கு ஆளனுப்பி அங்குள்ளவர் எவராவது இன்று விற்பயிற்சி செய்தனரா என்பதை அறிந்து வரச் செய்யுங்கள்.

(அமைச்சர் ஏவலனை அனுப்புகிறார். ஏவலன் அந்தப்புரம் சென்று விசாரித்து வருகின்றான்.)

ஏவலன் : மகாராஜா (மௌனமாய் நிற்கிறான்.)

ஜஹாங்கீர் : ஏன் தயங்குகிறாய்?

ஏவலன் : நம் மகாராணியார்............

ஜஹாங்கீர் : (திடுக்கிட்டு) மகாராணியாரா? மகாராணியாருக்கு என்ன! சீக்கிரம் சொல்!

ஏவலன் : மகாராணியாரே விற்பயிற்சி செய்தார்களாம்; அம்பு தவறி............

ஜஹாங்கீர் : போதும்! போதும்! உண்மையை அறிந்தேன்! (அமைச்சர் முதலிய யாவரும் திகைப்புடன் அரசரைப் பார்க்கின்றனர். ஜஹாங்கீர் சிறிது நேரம் மௌனமாயிருக்கிறார்.)

ஜஹாங்கீர் : (சுடலையைப் பார்த்து) பெண்ணே, நான் உனக்கு நீதி வழங்க வேண்டும். நீயோ, கணவனை இழந்து புலம்புகின்றாய். உன்னைக் கைம்பெண்ணாகச் செய்தவள் என் மனைவியே; ஆயினும், நீதி வழங்கப்பட வேண்டுவதே.

சுடலை : மகாராஜா, நான் நீதி வழங்கக் கேட்கவில்லை மகாராணியாரை............

ஜஹாங்கீர் : நான் மகாராணியாரை ஒன்றும் செய்யப் போவதில்லை; நீ இப்போது கைம்பெண்; அவளும் கைம்பெண்ணுக வேண்டும். அதுவே நீதி.

சுடலை : (அரசர்முன் விழுந்து வணங்கி) மகாராஜா, மன்னித்துவிடுங்கள்! ஏழை சென்றுவிடுகிறேன்!

ஜஹாங்கீர் : (கீழே இறங்கி வில்லொன்றைக் கொண்டு வரக் கட்டளையிட்டு, வில்லைச் சுடலையிடம் கொடுத்து) பெண்ணே, ஏழையானுலும் பணக்காரனுனுலும், அரசனுனுலும் ஆண்டியானுலும் நீதி வழங்கப்பட வேண்டும். இவ்வில்லில் அம்பைத் தொடுத்து, உன் கணவனை என் மனைவி கொன்றது போல, அவள் கணவனுகிய என்னை நீ கொல்ல வேண்டும். சீக்கிரம்!

சுடலை : மகாராஜா, நீங்கள் குடிகளின் உயிர்; உயிர் நீங்கினுல், உடல் வாழ முடியுமா? என் உயிரையே போக்கச் சொல்லுகின்றீர்களே! இதுவா நியாயம்!

ஜஹாங்கீர் : பெண்ணே, உன் அறிவுடைமையை வியக்கின்றேன்! அப்படியானுல், மகாராணியாரை............

சுடலை : மகாராணியாரை மன்னித்துவிடுங்கள். மகாராஜா, அவர்கள் அறிந்து செய்யவில்லையே! உங்கள் சாம்ராஜ்யத்தில் மன்னிப்புக்கு இடமில்லையா?

ஜஹாங்கீர் : பெண்ணே, நீதி எவ்வழியிலாயினும் வழங்கப்படவேண்டும். இதில் குற்றவாளி நான் அல்லது என் மனைவி ; மன்னிப்புக்கு இடமேது ?

சுடலை : மகாராஜா, அரசர்கள் வழங்கும் தீர்ப்பினால் திருத்தியடைய வேண்டியவர்கள் முறையிடுகின்றவர்கள் அல்லவா ? நீங்கள் கூறிய தீர்ப்பு எனக்குத் திருத்தியே ; அதை நிறைவேற்ற வேண்டுபவள் ஏழையாகிய நானே. இதில் உங்களுக்கு அதிகாரமில்லையே ! நான் சென்று வருகிறேன்.

ஜஹாங்கீர் : பெண்ணே, உன் அறிவை மெச்சினேன். ஆயினும், யான் உனக்கு அளிப்பதையேனும் நீ பெற்றுக்கொள்ள வேண்டும். உன் வாழ்க்கையைக் கஷ்டமின்றிக்கழிக்க வேண்டும்பொருள் அளிப்பேன். (அமைச்சரை நோக்கி) அமைச்சரே, இவளுக்கு நூறு ஏக்கர் நிலமும் வேண்டும் பொருளும் அளிக்க ஏற்பாடு செய்யும்.

(யாவரும் ஜஹாங்கீரின் நீதி வழங்கும் நேர்மையை வியந்து செல்கின்றனர்.)

[திரை]

கேள்விகள் :

1. வண்ணான் இறந்ததற்குக் காரணமென்ன ’

2. ஜஹாங்கீர் தம் மனைவியினிடம் மிகுந்த அன்பு பாராட்டினது எதனால் தெரிகிறது ?

3. வண்ணாத்தியின் சிறந்த குணம் எதனால் வெளியாகிறது ?

4. இந்நாடகத்திற்கு வேறு என்ன தலைப்புக் கொடுக்கலாம் ?

பயிற்சி :

இவ்வரலாற்றை வண்ணாத்தியே சொல்வது போல எழுது.

செய்யுட்பகுதி

I. சந்திரன்

மீனினம் ஓடிப் பரக்குதம்மா !—ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா !
வானும் கடலாக மாறுதம்மா !—இந்த
மாட்சியில் உள்ளம் முழுகுதம்மா ! 1

முல்லை மலர்ப்பந்தல் இட்டனரோ !—தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ !
வெல்லு மதியின் திருமணமோ !—அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ ! 2

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா !—அயல்
ஆம்பலும் கண்டு களித்ததம்மா !
இம்ப ருலகின் இயல்பிதம்மா !—மதிக்(கு)
இன்னார் இனியாரும் உண்டோஅம்மா ! 3

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா !—பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா !
என்ன அதிசயம் பாராயம்மா !—ஈதோர்
இந்திர சாலமோ கூறுயம்மா ! 4

குறிப்பு :

இதை இயற்றியவர் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. இவர் திருவிதாங்கூர் நாட்டுப் புத்தேரியில் வாழ்ந்து வருகிறார் ; சிறந்த தமிழ்ப் புலவர். சிறுவர்களுக்காகப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

சொல் விளக்கம் :

1. மீன் - நட்சத்திரம், வெள்ளி ஓடம் - பிறைச்சந்திரன்.
2. விதானம் - மேற்கட்டி, மதி - சந்திரன்.
3. அம்புயம் - தாமரை (சூரியனைக்கண்டு விரியும் ; சந்திரனைக்கண்டு குவியும்.), ஆம்பல்-அல்லி, இம்பர் - இவ்விடம், இன்னார் - பகைவர், இனியர் - நண்பர்.
4. இந்திரசாலம் - மாயவித்தை.

கேள்விகள் :

1. வானமும் கடலாக எப்போது மாறுகின்றது?
2. தேவர் எவ்விதப் பந்தல் இட்டதாக ஆசிரியர் கூறுகின்றார்?
3. சந்திரனைக் கண்டு விரியும் மலர் எது? குவியும் மலர் எது?
4. பிறைச்சந்திரன் எதைப்போன்றிருக்கின்றது?
5. பூரணச்சந்திரன் எதைப்போன்று விளங்கும்?

பயிற்சி :

சந்திரன் தோன்றும்போது வானம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை விளக்கி எழுது.

II. மழை பெய்யப் பாடியது

காரேயுன் நீரையெல்லாம் கள்ளன் கவர்ந்தானோ?
நீரே உதவாய் நெறியாமோ?—நேரேதான்
வாரியுண்டு வாரிமொண்டு வாரியுண்டு வானிருண்டு
பேரிகொண்டு நீதிரண்டு பெய்.

குறிப்பு :

இதை இயற்றியவர் மாயூரம் வேதநாயகம்பிள்ளை; கிறிஸ்தவர்; தமிழ்ப் புலவர்; நீதிபதியாய் மாயூரம், திருச்சி முதலிய இடங்களில் வேலை பார்த்தவர்.

சொல் விளக்கம் :

கார் - மேகம் (கருநிறமுடையது), நேரே - (உனக்கு) எதிரே, வாரி - கடல், (கையால்) முகந்து, பேரி - இடி, உண்டு - இருக்கின்றது, குடித்து.

கேள்விகள் :

1. மழை பெய்யாததற்கு என்ன காரணம் கூறப்படுகின்றது?
2. மேகத்துக்கு நெறி என்ன?
3. ஆசிரியர் மேகத்துக்கு எதனைக்காட்டி, நீரைக் குடித்து, நீரைப் பெய்யும்படி கூறுகின்றார்?

பயிற்சி :

1. உண்டு வாரி—இரு பொருள் கூறு.
2. மூன்றுவது வரியிலுள்ள அழகு என்ன?

III. நல்வழி

சாதி யிரண்டொழிய வேறில்லை ; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் ; இடாதார் இழிகுலத்தோர் ;
பட்டாங்கில் உள்ள படி. 1

எல்லாப் படியாலும் எண்ணினால், இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை ;—நல்லார்
அறிந்திருப்பார் ; ஆதலினால், ஆங்கமல நீர்போல்
பிரிந்திருப்பார் ; பேசார் பிறர்க்கு. 2

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் ;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்,
இல்லையென மாட்டார் இசைந்து. 3

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ ? மாநிலத்தீர் !—வேண்டா
'நமக்கும் அதுவழியே ; நாம்போ மளவும்
எமக்கென் ?' என் றிட்டுண் டிரும். 4

'ஒருநாள் உணவைஒழி' என்றால் ஒழியாய்
'இருநாளுக்(கு) ஏல்' என்றால் ஏலாய் ;—ஒருநாளும்
என்நோ வறியாய் ; இடும்பைகூர் என்வயிறே !
உன்னோடு வாழ்தல் அரிது ! 5

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ?—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர் ;
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 6

ஆவாரை யாரே அழிப்பர் ? அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பர் ?—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல் ? 7

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை ;—சீச்சீ !
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா(து)
உயிர்விடுகை சால வுறும் ! 8

தண்ணீர் நிலநலத்தால், தக்கோர் குணங்கொடையால்,
கண்ணீர்மை மாருக் கருணையால்,—பெண்ணீர்மை
கற்பழியா வாற்ருல், கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி. 9

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம் ?—வையத்(து)
அறும்பாவம் என்னஅறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல் ? 10

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம். 11

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே ! கேளுங்கள் :—கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் ! அந்தப் பணம் ? 12

ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்ருகும்;
அன்றி அதுவரினும் வந்தெய்தும்;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்;
எனையாளும் ஈசன் செயல். 13

உண்பது நாழி; உடுப்பது நான்குமுழம்,
எண்பது கோடிநினைந் தெண்ணுவன ;—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். 14

மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை ;—சுரந்தமுதம்
கற்ரு தரல்போல் கரவா(து) அளிப்பரேல்,
உற்ருர் உலகத் தவர். 15

ஆறிடும் மேடும் மடுவும்போ லாம்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் !—சோறிடும் ;
தண்ணீரும் வாரும் ; தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 16

குறிப்புரை :

இதை இயற்றியவர் ஔவையார்; பெண்பாற்புலவர்; தமிழிற்புலமை மிகுந்தவர் ; தமிழ் மக்களால் 'தமிழ்ப் பாட்டி' எனப் போற்றப்படுபவர். ஆத்திசூடி, வாக்குண்டாம் முதலியவை இவரால் இயற்றப்பட்டவை.

சொல் விளக்கம் :

1. சாற்றுங்கால் - சொல்லுமிடத்து, வழுவா - தவறாத, மேதினி - பூமி, பட்டாங்கு - உண்மையான நூல், உலகில் வறியார்க்குத் தம்மிடம் உள்ளவற்றைக் கொடுப்போர் பெரியோர்; கொடாதவர் இழி குலத்தவர். மக்களுள் வேறு பிரிவின்று.

2. படி - விதம், பொல்லாப் புழு மலி நோய்ப்புன்குரம்பை - (இச்சரீரம்) அருவருக்கத் தக்க புழுக்களும் நோய்களும் பெருகியுள்ள சிறிய வீடு, கமலம் - தாமரை. உடம்பின் தன்மையை அறிந்து ஞானிகள் அதன்மீது ஆசையில்லாதிருப்பதால், துன்பமில்லாமல் வாழ்வார்கள்.

3. பெருக்கு - வெள்ளம், அடி - பாதம், நல்கூர்ந்தார் - தரித்திரர். வறுமையுற்ற காலத்திலும் உயர்ந்த குடியிற்பிறந்தவர் தம்மிடம் யாசிப்பவருக்குக் கொடாமல் இரார்.

4. மாண்டார் - இறந்தவர், அது வழி - அம்மரணமே வழியாகும், இட்டு - பிச்சையிட்டு. இறந்தவர்பொருட்டு அழுவதால் பயனில்லையென அறிந்து, பிறர்க்குக் கொடுத்து வாழ வேண்டும்.

5. இடும்பை - துன்பம், ஏல் - ஏற்றுக்கொள், என்நோவு அறியாய் - என் துன்பத்தை அறிய மாட்டாய். வயிற்றைத் திருத்தி செய்தல் முடியாத காரியமாகும்.

6. விழும் அன்றே - அழிந்து போகுமன்றோ? ஏற்றம் - உயர்வு, பழுது - அழிவு. பிறருக்கு அடிமைப்படாமல் செய்யும் வேளாண்மைக்கு அழிவில்லை ; ஆதலின், அதுவே சிறந்தது.

7. அம்புவி - அழகிய பூமி, ஆவார் - நெடுங்காலம் வாழ்வதற்கு உரியவர், ஓவாமல் - ஒழியாமல். ஒருவனுக்கு ஏற்படும் ஆக்க அழிவுகளை விலக்குதல் முடியாது.

8. மூத்த - பெரிய, இச்சை - ஆசை வார்த்தை, இடித்து உண்கை - ஒருவரை நெருங்கி வாங்கி உண்ணுதல், சாலவுறும் - மிக உயர்ச்சியைப் பொருந்தும். பிறரைப் புகழ்ந்து அவரிடம்

வாங்கி உண்பதினும் உயிரை விட்டு மானத்தைக் காப்பாற்று-தலே உயர்வாகும்.

9. நலத்தால் - நன்மையினுல், தக்கோர் - நல்லோர், கண்-நீர்மை மாருக் கருணையால் - கண்களுடைய குணமானது நீங்-காத அருளினுலும், அற்புதம் - ஆச்சரியப்படத்தக்கவை. நில-வளத்தால் நீருக்கும், கொடையினுல் நல்லோருக்கும், அருளினுல் கண்களுக்கும், கற்பினுல் பெண்களுக்கும் பெருமை உண்டாகும்.

10. வையம் - பூமி, இடார்க்கு - தருமஞ் செய்யாதவர்க்கு, நொந்தக்கால் - வெறுத்தால், இருநிதியம் - பெரிய திரவியம், எய்த - பொருந்த. வறியவர் தீவினை செய்த தம்மை நோவாமல் தெய்வத்தை நோதலினுல் பயனில்லை.

11. சேவித்தும் - தொண்டு செய்தும், தெள் நீர்க்கடல் - தெளிந்த நீரையுடைய சமுத்திரம், பாழின் போவிப்பம் - பாழிலே செலுத்துகின்ருேம். கடவுளின் அருளை அடையும் வழியைத் தேடாமல், வயிற்றுக்கு உணவு தேடுவதிலேயே மக்கள் காலத்-தைச் செலவிடுகின்ருர்கள் ; இஃது அறியாமையே ஆகும்.

12. பாடுபட்டு - கஷ்டப்பட்டு, கேடுகெட்ட - பொருட்கேட்டி-னுல் சுகத்தை இழந்த, ஆவி - உயிர், கூடு - சரீரம். பூமியிற் புதைத்துவைத்த பணம் புதைத்தவருக்கு உதவாமற்போவதுடன், பிறர்க்கும் உதவாமற்போகும்.

13. ஒன்றை நினைக்கின் - ஒரு பொருளைப் பெற நினைத்தால், எய்தும் - கிடைக்கும். மக்களின் எண்ணத்தின்படி ஒன்றும் நடை பெருது ; கடவுளின் சித்தத்தின்படியே யாவும் நடை-பெறும்.

14. கண் புதைந்த - அறிவில்லாத, நாழி - நாழியரிசியன்-னம், நான்கு முழம் - நான்கு முழத் துணி, எண்ணுவன - எண்-ணுங்காரியங்கள், மண்ணின் கலம் போல - மண்ணினுற் செய்யப்-பட்ட பாத்திரம் போல, சாந்துணையும் - (சரீரம்) அழியும் வரை, சஞ்சலம் - துன்பம். உள்ளதே போதுமென்று திருத்தி அடை-யாதவர் சாகும் வரை துன்பமே அடைவர்.

15. பழுத்தால் - பழுத்திருந்தால், வா என்று - தின்ன வா என்று சொல்லி, கன்று ஆ - கன்றையுடைய பசு, அமுதம் - பால். கொடையாளருக்கு எல்லாரும் தாமே உறவினராவர்.

16. ஆறுஇடும் - ஆற்று வெள்ளத்தினுல் உண்டாக்கப்படும், மடு - பள்ளம், ஏறிடும் மாறிடும் - வளரும் தேயும், உள் நீர்மை

உயர்ந்து வீறும் - உள்ளத்தின் தன்மை ஓங்கி விளங்கும். பொருள் இருக்கும்போதே அன்னபானங்களை வழங்கி, மேன்மையடையுங்கள்.

கேள்விகள் :

1. உலகில் மனிதர் எத்தனை பிரிவினர் ஆவர் ?
2. நல்லார் உடம்பின் தன்மையை அறிந்து எவ்வாறு ஒழுகுவர் ?
3. நல்ல குடிப் பிறந்தாரின் தன்மை யாது ?
4. மாண்டாரை நினைத்து என்ன செய்து வர வேண்டும் ?
5. வயிற்றைத் திருத்தி செய்தல் முடியாது. காரணம் என்ன ?
6. உலகிலுள்ள தொழில்களுள் சிறந்த தொழில் யாது ? ஏன் ?
7. பூமியில் செய்யமுடியாதன யாவை ?
8. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை யாது ?
9. தண்ணீர், தக்கோர், கண், பெண்—பெருமை அடைவது எவற்றால் ?
10. இருநிதியம் யாவருக்கு இல்லை ?
11. வயிற்றுணவுக்காக மக்கள் செய்து வருவன யாவை ?
12. புதைத்து வைத்த பணம் எவ்வாறாகும் ?
13. 'எல்லாம் கடவுளின் செயல்,' என்பதை எவ்வாறு அறியலாம் ?
14. மக்கள் உயிர் வாழ அவசியமானவை யாவை ?
15. யாவரும் தம்மை உறவினராகக் கருதச் செய்ய வேண்டுவது என்ன ?
16. பொருளின் நிலையற்ற தன்மை அறிந்து என்ன செய்ய வேண்டும் ?

T3
031(5)
N52

286

SELVAN SENTAMIL VACHAKAM

BOOK V

AUTHOR :
G. MICHAEL PILLAI, M.A.

EDITOR :
VIDWAN M. V. VENUGOPAULA PILLAI

JEGASELVAN & CO.,
NAGERCOIL

Copyright] [*As.* 10